விலை: 30.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram WESTERN UNION WU
Ria
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-1698)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 02 திங்கட்கிழமை (15.03.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 086

### கோட்டா கூறுவதைப்போல
## மாகாணத் தேர்தல்களை நடத்தவே முடியாது!



(கொழும்பு)
ஜனாதிபதி கோட்டாபய கூறுவதுபோல அவசரமாக மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாது 19



## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகளின் கணவன்மார் இருவர் விபத்தில் பலி
### மரணச்சடங்குக்கு சென்று திரும்பியபோது மன்னாரில் துயரம்



(மன்னார்)
மன்னார் - மதவாச்சி பிரதான வீதி, சிறுநாவற்குளம் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் ஒரு மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பஸ்தர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர். 19

### இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படும்
# ஜெனிவா பிரேரணையை வெற்றி கொள்வது கடினம்
### வெளிவிவகாரச் செயலாளர் தெரிவிப்பு

- ஸ்ரீபன் ராப்பின் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை.
- பாரிய போர்க் குற்றங்கள் எவையும் நிகழவில்லை.
- காணாமலாக்கப்பட்ட உறவுகளுடன் பேசவுள்ளோம்.
- ஐ.நா பாதுகாப்புச் சபையில் சீனா, ரஷ்யா ஆதரவளிக்கும்.



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்படும் பிரேரணையை வெற்றி கொள்வது கடினம் என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.
மேலும் மிச்செல் பச்லெட்டின் மீளாய்வு அறிக்கையில் கூறப்பட்ட விடயங்களும் பிரித் 19

## வயோதிபரின் சடலம் மீட்பு
### கைதடியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
யாழ். கைதடி பகுதியில் உள்ள பற்றைக்காட்டு பகுதியிலிருந்து வயோதிபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. 19

### மேல் மாகாணம் தவிர்ந்த
## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

(கொழும்பு)
மேல் மாகாணப் பாடசாலைகள் தவிர நாட்டில் உள்ள ஏனைய பாடசாலைகள் இன்று ஆரம்பமாகவுள்ளன.
மேல் மாகாண பாடசாலைகளில் 19

### கொரோனாவினால்
## நேற்றும் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் 19

## ட்ரக்டர் தடம்புரண்டதில் இளைஞன் உயிரிழப்பு
### மடுவில் பரிதாபம்

(மன்னார்)
சட்டத்துக்குப் புறம்பாக மணல் அகழ்வில் ஈடுபட்ட இளைஞன் ஒருவர் உழவு இயந்திரம் விபத்துக்குள்ளாகியதில் உயிரிழந்துள்ளார். 19


### காணாமல்போனோர் அலுவலகத்துக்கு
## புதிய ஆணையாளர்கள் விரைவில் நியமனம்
### நீதி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)
"காணாமற்போனோர் அலுவலகத்துக்கு (OMP) புதிய ஆணையாளர் 19

### வடக்கில் நேற்றும்
## 19 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் 13 பேர் உட்பட 19

## எதிர்வரும் புதன் யாழில் பேரணி
### அனைவரையும் ஒன்றுபடுமாறு மாவை அழைப்பு



(யாழ்ப்பாணம்)
இலங்கை அரசாட்சியாளரின் தமிழின அழிப்பு நடவடிக்கைகளை எதிர்த்தும், அவ்வாறான நடவடிக்கைகளை இழைத்தவர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட வேண்டுமென்றும் இவ்வாறான இனவழிப்பு நடவடிக்கைகள் மீளநிகழாமல் தடுக்கவும் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலை அரசு ஏற்றுக் கொள்ளவைப்பதற்கான பிரேர 19

### காணி ஆவணங்கள் அ.புரத்துக்கு மாற்றம் எனது முடிவல்ல என்கிறார் யாழ்.அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)
வட மாகாண காணி ஆவணங்கள் அநுராதபுரத்திற்கு எடுத்துச் 19

## புலிகளுக்கு எதிரான தடையை மீளாய்வு செய்க
### பிரித்தானிய மேன்முறையீடு நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)
பிரித்தானியாவில் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு எதிராக விதிக்கப் பட்டுள்ள தடை குறித்து மீளாய்வு செய்யுமாறு இரகசிய மேன் 19

## ஐ.நாவில் வெளிவந்த புதிய அறிக்கை இலங்கையின் இறையாண்மையை மீறுவதாகும்
### வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குற்றச்சாட்டு



(கொழும்பு)
ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் கொண்டு வரப்பட்டுள்ள திருத்தப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் கருத்து வெளியிட்டுள்ளது.
அந்த வகையில் குறித்த தீர்மானம் இலங்கையின் இறையாண்மையை மீறுவதாகும் என்று 19

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# புலமைப் பரிசில், உயர்தரப் பரீட்சைகளை ஒத்திவைப்பதற்கான தீர்மானம் ஏதுமில்லை

## கல்வி அமைச்சின் செயலாளர் அறிவிப்பு

(கொழும்பு)

ஓகஸ்ட் மாதம் நடைபெறவிருந்த 2021ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த உயர்தரப் பரீட்சை ஆகியவற்றை ஒத்திவைக்க எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று கல்வி அமைச்சின் செயலாளர், பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த. உயர்தரப் பரீட்சை ஆகியவற்றை இந்த ஆண்டு ஓகஸ்டில் நடத்த முடியாது என்று முடிவு செய்யப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் சனத் பூஜித நேற்று காலை தெரிவித்தார்.

பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் இல்லாததால் பாடத்திட்டங்கள் முறையாக முடிக்கப்படவில்லை என்பதே இதற்குக் காரணம் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையிலேயே ஓகஸ்ட் மாதம் நடைபெறவிருந்த 2021ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த உயர்தரப் பரீட்சை ஆகியவற்றை ஒத்திவைக்க எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று கல்வி அமைச்சின் செயலாளர் நேற்று மாலை தெரிவித்துள்ளார். (ஞா)

# கொரோனாவால் உயிரிழந்த 45 பேரின் சடலங்கள் இதுவரை அடக்கம்

(கொழும்பு)

நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் வைக்கப்பட்டிருந்த 45 கொரோனா சடலங்கள் இதுவரையில் அடக்கம் செய்யப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இந்த நிலையில், கொரோனா சடலங்களை அடக்கம் செய்வது தொடர்பாக காணப்பட்ட பிரச்சினைகள் முழுவதுமாக நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இன்னும் ஓரிரண்டு சடலங்கள் உள்ளதாகவும் அவை விரைவில் அடக்கம் செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில், ஓட்டமாவடி பிரதேசத்தில் அடக்கம் செய்யும் பணிகள் இடம்பெற்று வருவதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா மேலும் தெரிவித்தார். (ஞா)

## இயந்திரம் இயங்கிய நிலையில்

# இந்தியப் படகு ஆட்களின்றி நெடுந்தீவில் கரையொதுங்கியது

(யாழ்ப்பாணம்)

இயந்திரம் இயங்கிக்கொண்டிருந்த நிலையிலேயே இந்தியப் படகு ஒன்று மீனவர்கள் எவரும் இல்லாத நிலையில் நெடுந்தீவில் கரையொதுங்கியுள்ளது.

நேற்று இரவு குறித்த மீன்பிடிப்படகு கரையொதுங்கியுள்ளது.

இதேவேளை, குறித்த படகு இந்தியாவின் புதுக்கோட்டை மாவட்டத்தின் கோட்டைப்பட்டினம் என்ற பகுதியைச் சேர்ந்தது என்று தெரியவந்துள்ளது.

இதேவேளை, தமிழக மீனவர் பிரதிநிதிகளூடாக தொடர்பு கொண்டு குறித்த படகு குறித்து தகவல்சேர்க்க முற்பட்ட வேளை, படகிலிருந்தவர்களின் தூக்கத்தினால் படகு எல்லை தாண்டியதாகவும் இதனை அடுத்து பிறிதொரு படகில் இந்திய மீனவர்கள் இந்தியாவுக்கு திரும்பியிருப்பதாகவும் சொல்லப்படுகின்றது. (ஞா)

# உலகில் கொரோனாத் தொற்று 12 கோடியையும் கடந்தது

(வொஷிங்டன்)

உலகெங்கும் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 12 கோடியைக் கடந்துள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை வரையான தரவுகளின் பிரகாரம் உலகம் முழுவதும் 12 கோடியே 57 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், 26 இலட்சத்து 59 ஆயிரத்து 836 பேர் நேற்று வரை தொற்று நோயால் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, உலகம் முழுவதும் தொற்றுக்குள்ளாகி பாதிக்கப்பட்டவர்களில் 9 கோடியே 65 இலட்சத்து 89 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் குணமடைந்துள்ளனர். 2 கோடியே 8 இலட்சத்துக்கு மேற்பட்டவர்கள் தொற்று நோயுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் 89,312 பேரின் நிலைமை மோசமாக உள்ளது.

உலகில் கொரோனா தொற்று நோயால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடான அமெரிக்காவில் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 3 கோடியே 43 ஆயிரத்தைக் கடந்துள்ளது. 5 இலட்சத்து 46 ஆயிரத்து மேற்பட்டவர்கள் அமெரிக்காவில் உயிரிழந்துள்ளனர். (ஞா)

# வவுனியாவில் நேற்றும் நால்வருக்கு கொரோனா

(வவுனியா)

வவுனியாவில் மேலும் நான்கு பேருக்கு நேற்று இரவு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் கடந்த வாரத்தில் இருந்து மீண்டும் கொரோனா தொற்று அதிகரித்து வரும் நிலையில் அவர்களுடன் தொடர்புடையவர்கள், ஆடைத் தொழிற்சாலையை சேர்ந்தோருக்கு பல்வேறு பகுதிகளிலும் சுகாதார துறையினரால் பிசீஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதில் ஒரு தொகுதி முடிவுகள் இன்று இரவு வெளியாகிய நிலையில், பூவரசன்குளம் பகுதியில் ஒருவருக்கும், வவுனியாவில் உள்ள கண்டி மரக்காலையில் பணியாற்றும் இருவருக்கும், கண்டி வீதியில் உள்ள ஆடைத் தொழிற்சாலையைச் சேர்ந்த ஒருவருக்கும்என நான்கு பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சுகாதார பிரிவினர் முன்னெடுத்துள்ளனர். (ஞா-250)

# ரிக்ரொக் விபரீதம் இளைஞன் படுகாயம்

## முல்லையில் சம்பவம்

(மல்லைத்தீவு)



புதுக்குடியிருப்பு நகரில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளை செலுத்தியபடி எழுந்து நின்று ரிக்ரொக் வீடியோ பதிவு செய்துள்ளார். அவர் உடையார் கட்டிலிருந்து, புதுக்குடியிருப்பு நகர் வரை பல இடங்களில் இந்த வித்தையை காண்பித்தபடி சென்றுள்ளார்.

இதன்போது, மோட்டார் சைக்கிள் அருகிலுள்ள பாலத்திற்குள் பாய்ந்து விபத்திற்குள்ளானது.

இதில் படுகாயமடைந்தவர் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (ஞா)


மணிவிழா நாயகனை
மனதார வாழ்த்துகின்றோம்



Best Wishes
திரு. செல்வரட்ணம் சந்திரராஜா
(வலயக் கல்விப் பணிப்பாளர் - யாழ். வலயம்)
வாழ்க பல்லாண்டு
உயர்வான சிந்தனை
உயர நினைப்பவனுக்கு உதவிடும் பண்பு
தட்டிக்கொடுத்து வேலைவாங்கும்
கெட்டிக்காரத்தனம்
நேரம் தவறாமை - செய்தொழில் நேர்த்தி
தளர்வில்லா நிர்வாகம்
அளவில்லா ஆனந்தம் தரும்
நகைச்சுவை கலந்த நறுக்கான பேச்சு
இதுவே தங்கள் வெற்றியின் தாரக மந்திரம்
வாழ்க பல்லாண்டு
தொடர்க உங்கள் பணி.
வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை.
(C-1699)



குறைந்த பட்ச தகமையுடன் உடனடி வேலைவாய்ப்பு
NGC
கல்வித்தகைமை தரம் 10, O/L, A/L கற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்
Northern Group of Company
CAREER OPPORTUNITIES
பயிற்சி நெறியுடன் கூடிய தொழில் வாய்ப்பு
புதிய கிளைகள் ஆரம்பிக்கப்படவுள்ள இடங்கள்:
இலங்கையில்: கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம்.
04 வகையான பதவி வெற்றிடங்கள் உண்டு மற்றும் 03 தொடக்கம் 06 மாதம் வரையான பயிற்சி நெறியுடன் கூடிய தொழில் வாய்ப்பு.
குறிப்பு:- வயதெல்லை 18 தொடக்கம் 35 வரை, ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
பயிற்சியின்போது:- 23 500/= தொடக்கம் 35 000/= மேல் பெற்றுக் கொள்ள முடியும்.
பயிற்சியின் பின்:- 45000/= இற்கு மேற்பட்ட சம்பளத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.
தங்குமிட வசதிகள் உண்டு, உணவு மற்றும் மருத்துவ வசதிகள் செய்து தரப்படும்.
மற்றும் வெளிநாட்டு சுற்றுப் பயணங்கள்
No.648, Hospital Road. Jaffna.
(உடன் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளவும்.)
Customer Service: 021 790 4574
077 511 3914, 077 922 7102
(C-1674)

# வேகமாகப் பரவும் புதிய வகை வைரஸ் இலங்கையை மிக மோசமாகப் பாதிக்கும்

## விசேட வைத்திய நிபுணர் எச்சரிக்கை

**(கொழும்பு) தென்னாபிரிக்காவில் பரவும் புதிய வகை கொரோனா வைரஸ் இலங்கையில் பரவினால் எதிர்காலத்தில் தொடர் பிரச்சினைகளை எதிர் நோக்க நேரிடும் என இலங்கை வைத்தியர் சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன எச்சரித்துள்ளார்.**



தென்னாபிரிக்காவில் பரவிய வைரஸ் தொற்று இங்குள்ள வைரஸ் தொற்று வகைக்கு இணையானது எனவும் அது மிக வேகமாக மற்றவர்களுக்கு பரவக்கூடும் எனவும் புதிய அலை உருவாகும் வாய்ப்பு உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மேலும், அவசர சிகிச்சைகளுக்கான தேவை அதிகரிக்கும் எனவும் உயிரிழப்போரின் எண்ணிக்கை உயரும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

தற்போது தொற்றுக்குள்ளானவர்களுக்கு மீண்டும் தொற்று ஏற்படலாம். அதேபோன்று, தற்போதைக்கு பயன்படுத்தப்படும் தடுப்பூசிக்கும் சிறந்த பாதுகாப்பு உறுதி அளிக்கப்படாது. ஏற்கனவே தொற்றுக்குள்ளானவரின் இரத்தத்தை இந்த வைரஸ் தன்மை தொற்றியவர்களுக்கு பயன்படுத்த முடியாது போகும் என விசேட வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன மேலும் தெரிவித்தார். (நி)

# இலங்கை மீதான நம்பிக்கையை மியன்மார் மக்களும் இழந்துள்ளனர்



(கொழும்பு)

பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டுக்கு மியன்மாருக்கு அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளமையால், சர்வதேசத்தின் மத்தியில் இலங்கைக்கு அவப்பெயர் ஏற்பட்டுள்ளது.

அத்தோடு மியன்மார் மக்கள் இலங்கை மீது நீண்ட காலமாகக் கொண்டிருந்த நம்பிக்கையையும் இழந்துள்ளனர் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், மியன்மாரில் இராணுவ ஆட்சி கவிழ்ப்பின் பின்னர் இடம்பெறுகின்ற ஜனநாயக விரோத செயற்பாடுகளை உலக நாடுகள் அனைத்தும் நிராகரித்துள்ளதோடு, அவற்றுக்கு கடும் எதிர்ப்பையும் வெளியிட்டுள்ளன. அந்நாட்டில் வீதிக்கிறங்கி போராடிய நிராயுதபாணியான பொது மக்கள் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் இலங்கை அரசாங்கம் பிம்ஸ்டெக் மாநாட்டுக்கு அழைப்பு விடுத்து இராணுவ ஆட்சியை ஏற்றுக் கொண்டுள்ளதால் சர்வதேசத்தின் மத்தியில் இலங்கைக்கு அவப்பெயர் ஏற்பட்டுள்ளது.

மியன்மார் மக்களுக்கு இலங்கை மீது காணப்பட்ட நீண்டகால ஸ்திர நம்பிக்கை அற்றுப்போயுள்ளது. இதன் மூலம் அரசாங்கத்தின் இராஜதந்திர கொள்கைகளிலுள்ள குறைபாடுகளும் தெளிவாகியுள்ளன என அவர் தெரிவித்தார்.(4)

# கணனி தொழில்நுட்பம் சார்ந்த தொழில்களில் 40000 வெற்றிடங்கள்

## சம்பத் அமரதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில்நுட்ப பட்டப்படிப்பிற்கு 10ஆயிரம் மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

மாணவர்களை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கை இந்த மாதத்தில் இடம்பெறவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர், பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் கணனி தொழில்நுட்பம் சார்ந்த தொழில்களில் 40ஆயிரம் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம் என்பன ஒன்லைன் ஊடாக கற்பித்தல் பாடநெறியை ஆரம்பித்துள்ளதாகவும் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.(நி)

# இலங்கைக்கு ஆதரவு அளிக்கும் வகையில் கருத்துக்களை வெளியிடும் சீனா

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது அமர்வில் இலங்கைக்கு ஆதரவு அளிக்கும் வகையில் சீனா கருத்துக்களை மீண்டும் வெளியிட்டுள்ளது.

இணை கருத்துக்களை கொண்ட நாடுகளின் குழு சார்பில் உரையாற்றியுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கான சீன தூதுவர் சென் சூ இந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் பெயரை குறிப்பிடாவிடினும், மனித உரிமைகள் பேரவை, அரசியல்மயமாவது தொடர்பில் அவர் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

மனித உரிமைகள் தொடர்பில் பயனுள்ள விவாதங்கள் இருக்க வேண்டும் எனவும் அரசியல் காரணங்களுக்காக அது அமைந்து விடக்கூடாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

குறிப்பாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு எதிராக அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் நடவடிக்கையானது, அந்த நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடும் செயற்பாட்டுக்கு ஒப்பானது என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கான சீன தூதுவர் சென் சூ குற்றம் சாட்டியுள்ளார். (நி)


IMMEDIATE VACANCINS

1. Lecturer for
   - Civil Engineering / Quantity Surveying (NVQ 5/6)
2. Teachers For A/L Technology Stream
   - ICT Technician (NVQ 4)
   - Graphic Designing (NVQ 4)
3. Teachers For A/L Classes
   - E-Tech (Civil only), ICT, SFT,

*An Experienced retired Government Lecturer / Teacher or a Graduate with Teaching Experience.*

4. MARKETING Executive (Education)
Previous Experience Will be the an added Qualification

Managing Director
APSS INTERNATIONAL
No, 189,K.K.S Road, Chunnakam, Jaffna.
E-mail :- apssengineering@yahoo.com
Contact No :- 021 2244 666 (1701)


# 20 ஆயிரம் இளம் முயற்சியாளர்களுக்கு இவ்வருடம் காணி அலகுகள் வழங்கப்படும்

## அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

நாட்டில் 20ஆயிரம் இளம் முயற்சியாளர்களுக்காக இந்த வருடத்தில் காணி அலகுகளை பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது இளம் முயற்சியாளர்களுக்காக ஒரு இலட்சம் காணி அலகுகள் வழங்கும் வேலைத்திட்டத்தின் முதற்கட்டம் என காணி அமைச்சின் செயலாளர் ஆர்.ஏ.ஏ.கே. ரணவக்க தெரிவித்தார்.

காணி அலகுகளைப் பெற்றுக்கொள்வதற்காக நாடளாவிய ரீதியில் 4இலட்சத்து 35ஆயிரம் இளம் முயற்சியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இவர்களில் தெரிவு செய்யப்பட்ட முயற்சியாளர்களுக்கான நேர்முகத் தேர்வுகள் எதிர்வரும் 31 ஆம் திகதி நிறைவடையவுள்ளன. விவசாயம், கால்நடை வளர்ப்பு, நுண் தொழில் முயற்சி மற்றும் தேசிய உற்பத்திகள் உள்ளிட்ட முயற்சிகளில் ஈடுபடுபவர்களுக்கு காணிகளை வழங்குவதே அரசின் நோக்கமாகும்.

இதற்கிணங்க, எதிர்வரும் ஜூன் மாதம் முதல் காணிகளை வழங்கும் நடவடிக்கையை ஆரம்பிக்கவுள்ளதாக காணி அமைச்சின் செயலாளர் ரணவக்க தெரிவித்தார். (நி)

# மீண்டும் இலங்கை வீழ்ச்சி மே.தீவுகள் அபார வெற்றி

மேற்கிந்தியத் தீவுகள்- இலங்கை அணிகள் இடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடர் ஆன்டிகுவாவில் நடைபெற்று வருகிறது.

முதல் போட்டியில் இலங்கையை 8 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்திய மேற்கிந்தியத் தீவுகள் தொடரில் 1-0 என முன்னிலை பெற்றது.

இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 2 ஆவது ஒரு நாள் போட்டி ஆன்டிகுவா மைதானத்தில் நடந்தது. டொஸ் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது.



இலங்கை அணியின் தொடக்க ஆட்டக்காரர் குணதிலக பொறுப்புடன் ஆடினார். சதமடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் 96 ரன்னில் ஆட்டமிழந்தார்.

விக்கெட் கீப்பர் சண்டிமால் 74 ரன்னில் அவுட்டானார்.

கடைசி கட்டத்தில் ஹசரங்க அதிரடியாக ஆடினார். அவர் 31 பந்தில் 4 சிக்சர், 2 பவுண்டரி உட்பட 47 ரன்கள் எடுத்தார்.

இறுதியில் இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 8 விக்கெட்டுக்கு 273 ரன்கள் எடுத்தது. மேற்கிந்தியத் தீவுகள் தரப்பில் ஜேசன் மொகமது 3 விக்கெட்டும், அல்ஜாரி ஜோசப் 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, 274 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மேற்கிந்தியத் தீவுகள் அணி களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர்கள் எவின் லெவிசும், ஷாய் ஹோப் பும் சிறப்பான தொடக்கம் தந்தனர்.

இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 192 ரன்கள் சேர்த்தது. எவின் லெவிஸ் பொறுப்புடன் ஆடி சதமடித்து 103 ரன்னில் வெளியேறினார். ஷாய் ஹோப் 84 ரன்னில் ஆட்டமிழந்தார்.

அடுத்து இறங்கிய நிகோலஸ் பூரன் ஆட்டமிழக்காமல் அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார்.

இறுதியில், மேற்கிந்தியத் தீவுகள் அணி 49.4 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 274 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் ஒருநாள் தொடரை 2-0 என கைப் பற்றியுள்ளது. ஆட்ட நாயகன் விருது எவின் லெவிசுக்கு வழங்கப் பட்டது. (4)

# பங்களாதேஷை வீழ்த்தியது மே.தீவுகள் ஜாம்பவான்கள் அணி



வீதிப் பாதுகாப்பு உலக கிரிக்கெட் தொடரின், 12ஆவது லீக் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் ஜாம்பவான்கள் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

ராய்ப்பூர் மைதானத்தில் கடந்த 12 ஆம் திகதி நடைபெற்ற இப்போட்டியில், மேற்கிந்திய தீவுகள் ஜாம்பவான்கள் அணியும் பங்களாதேஷ் ஜாம்பவான்கள் அணியும் மோதின.

இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் ஜாம்பவான்கள் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய பங்களாதேஷ் ஜாம்பவான்கள் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 169 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதன் போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ரொபி ஹொசைன் 44 ஓட்டங்களையும் நசிமுதீன் 33 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். இதனைத்தொடர்ந்து 170 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் ஜாம்பவான்கள் அணி, 18.5 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது.

இதனால் மேற்கிந்திய தீவுகள் ஜாம்பவான்கள் அணி 5 விக்கெட்டுகளால் அபார வெற்றி பெற்றது. (4)



## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்


# மே.தீவுகள் அணியின் கப்டனாக பிராத்வெய்ட் நியமனம்

மேற்கிந்தியத் தீவுகள் டெஸ்ட் கிரிக்கெட் அணியின் கப்டனாக ஜேசன் ஹோல்டர் பதவி வகித்தார்.



கொரோனா அச்சம் காரணமாக அவர் விலகியதால் புதிய கப்டனாக கிரேக் பிராத் வெய்ட் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் டெஸ்ட் கிரிக்கெட் அணியின் கப்டனாக ஜேசன் ஹோல்டர் 2015 ஆம் ஆண்டு முதல் இருந்து வந்தார்.

அவரது தலைமையில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 37 டெஸ்ட் போட்டியில் ஆடி 11 வெற்றி, 5 சமநிலை, 21 தோல்வி கண்டது.

கடந்த மாதம் நடந்த பங்களாதேஷ் டெஸ்ட் தொடருக்கான அணியில் இருந்து கொரோனா அச்சம் காரணமாக ஜேசன் ஹோல்டர் விலகினார். இதனால் அந்தத் தொடருக்குத் தொடக்க ஆட்டக்காரர் கிரேக் பிராத்வெய்ட் கப்டனாக செயற்பட்டார். அவரது தலைமையில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 2-0 என்ற கணக்கில் டெஸ்ட் தொடரை வென்றது.

இந்த நிலையில் மேற்கிந்தியத் தீவுகள் டெஸ்ட் அணியின் புதிய கப்டனாக 28 வயதான கிரேக் பிராத் வெய்ட் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 21 ஆம் திகதி தொடங்கும் இலங்கைக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அவர் கப்டன் பொறுப்பை ஏற்கிறார்.

பிராத்வெய்ட் இதுவரை 66 டெஸ்ட் போட்டியில் விளையாடி 8 சதம் உட்பட 3,876 ரன்னும் 10 ஒரு நாள் போட்டிகளில் 278 ரன்னும் எடுத்துள்ளார். (4)

# அதிக விக்கெட்; பும்ராவை முந்திய சாஹல்

20 ஓவர் சர்வதேச போட்டிகளில் இந்திய வீரர்களில் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரீத் பும்ரா, சுழற்பந்து வீரர் யுஸ்வேந்திர சாஹல் ஆகியோர் அதிக விக்கெட் கைப்பற்றி சம நிலையில் இருந்தனர். சாஹல் 45 ஆட்டத்திலும் பும்ரா 50 போட்டியிலும் தலா 59 விக்கெட் கைப்பற்றி முதலிடத்தில் இருந்தனர்.

இங்கிலாந்துக்கு எதிரான நேற்றைய 20 ஓவர் போட்டியில் சாஹல் ஒரு விக்கெட் கைப்பற்றினார்.




இதன் மூலம் அவர் பும்ராவை முந்தி 60 விக்கெட் வீழ்த்தி முதல் இடத்தை பிடித்து உள்ளார். அவர் 25 ரன் கொடுத்து 6 விக்கெட் கைப்பற்றியதே சிறந்த பந்துவீச் சாகும். திருமணம் செய்ய இருப்பதால் பும்ரா 20 ஓவர் தொடரில் விளையாடவில்லை. இதனால் சாஹலால் அவரை முந்த முடிந்தது.

அஸ்வின் 52 விக்கெட் கைப்பற்றி 3 ஆவது இடத்திலும், புவனேஷ்வர்குமார் 41 விக்கெட்டுடன் 4 ஆவது இடத்திலும், குல்தீப் யாதவ், ரவீந்திர ஜடேஜா ஆகியோர் தலா 39 விக்கெட் கைப்பற்றி 5 ஆவது இடத்திலும் உள்ளனர்.

இதில் அஸ்வின் 20 ஓவர் போட்டிக்கான அணியில் ஓரம் கட்டப்பட்டுள்ளார். டெஸ்டில் மட்டுமே அவர் விளையாடி வருகிறார். (க)

# குணமடைந்தோர் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் மேலும் 395 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 84 ஆயிரத்து 648 ஆக உயர்வடைந்துள்ளது. (நி-4)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு நன்றி நவிலலும்

### அமரர். ஐயம்பிள்ளை அப்புக்குட்டி



அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 16.03.2021 நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 18.03.2021 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கடந்த 16.02.2021 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு ஓடிவந்து உடன் உதவிகள் செய்தோர் மற்றும் முகநூல் தொலைபேசி ஊடாக தங்கள் துயரங்களைப் பகிர்ந்து கொண்டோர் அனைவரிற்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

காந்திஜீ வீதி,<br>கொக்குவில் மேற்கு, கொக்குவில். (C-1699)

குடும்பத்தினர்.<br>075 268 6856

## ஈரவிழிகளுடன் ஓராண்டு நினைவலைகள்

### அமரர். திருமதி. இராஜேஸ்வரி குமாரசாமி

பிறப்பு 27 . 09 . 1935



இறப்பு 26 . 03 . 2020

திதி: துதியை (15.03.2021 திங்கட்கிழமை)

முந்தித்தவம் கிடந்து முந்நூறு நாள் சுமந்து<br>
நாற்குரவர்களாக நான்கு மகன்களைப் பெற்றீர்<br>
எம்மையெல்லாம் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு<br>
வழிகாட்டியாய் வாழ்ந்தீரே – நீர் செய்த தவத்தால்<br>
வானுயர்ந்து வாழ்வாங்கு வாழ்கின்றோம்.<br>
எம்மைவிட்டு பிரிந்து சென்றாலும் உங்கள்<br>
நினைவுகள் எம்மை சுற்றி வருகுதம்மா<br>
ஆறமுடியவில்லை ஆண்டொன்றும் முடிந்தது.<br>
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.<br>
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

காரைக்கால் சிவன்கோவிலடி,<br>இணுவில் கிழக்கு, இணுவில்.

நீங்கா நினைவுகளுடன்<br>குடும்பத்தினர்.

(எல்)

# அம்பிகையின் அறப்போர் தொடர்பில் பிரித்தானியா மௌனமாக இருப்பது ஏன்?

## சிவசக்தி ஆனந்தன் கவலை

(நெளுக்குளம்)

தாயக உறவுகளுக்கு நீதி வேண்டி இரண்டு வாரங்கள் கடந்து அறப்போர் நடத்திவரும் அம்பிகை செல்வகுமாரின் உடல்நிலைமை மோசமடைந்துள்ள நிலையில் பிரித்தானிய அரசாங்கம் தொடர்ந்தும் மௌனமாக இருப்பது வேதனையளிப்பதாக தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இலங்கை தொடர்பில் பிரித்தானிய அரசாங்கம் தலைமையில் கொண்டு வரப்பட்டுள்ள பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தினை ஏற்படுத்தல் எனும் தலைப்பிலான பிரேரணையில் தமிழினத்திற்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கு இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்தல் உள்ளிட்ட நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 15 நாட்களாக அஹிம்சை வழியில் போராட்டத்தினை நடத்தி வருகின்றார்.

இவருடைய போராட்டத்தினை வலுப்படுத்தும் முகமாகவும் அவருடைய நான்கு அம்சக் கோரிக்கைகளுக்கு மேலும் ஆதரவளித்தும் வடக்கு-கிழக்குத் தமிழர் தாயகத்தின் அனைத்து பகுதிகளிலும் புலம்பெயர் தேசங்களிலும் தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டங்கள், கவனயீர்ப்புப் போராட்டங்கள் தொடர்ந்து கொண்டே உள்ளன.

தமிழ் மக்கள் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கான நீதி கோரி தன்னெழுச்சியாக போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றபோதும் அரசாங்கமும் சர்வதேசமும் அமைதியாகவே இருக்கின்றமை துரதிர்ஷ்டவசமானது.

விசேடமாக அம்பிகை செல்வகுமார், உலகிற்கு ஜனநாயக விழுமியக் கற்பிதங்களை வழங்கும் பிரித்தானியாவில் தனது அறப்போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றார்.

ஆனால் பிரித்தானிய அரசாங்கம் தொடர்ச்சியாக மௌனித்த நிலையிலேயே இருக்கின்றது. இவ்விதமான நிலையில் பிரித்தானிய அரசாங்கம் இருப்பதானது அதிர்ச்சியையும் வேதனையும் அளிப்பதாக உள்ளது.

இலங்கையில் நடைபெற்ற போரின் போது நிகழ்த்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் பிரித் தானியா அறியாமலில்லை. அதுபற்றி ஆவணங்களையும் பிரித்தானியா கொண்டிருக்காமல் இல்லை.

அதேநேரம் நீதியை எதிர்பார்த்திருக்கும் தமிழ் மக்களின் தொடர்ச்சியான போராட்டங்களையும், கோரிக்கைகளையும் பிரித்தானியா உணராமலில்லை.

அவ்வாறான நிலையில் நியாயமான நீதியொன்றை பெற்றுக்கொள்வதற்கு வழிவகுக்கும் வகையில் அம்பிகை செல்வகுமார் முன்வைத்துள்ள கோரிக்கைகள் அனைத்தையும் உள்ளீர்த்து நிறைவேற்றப்படவுள்ள இலங்கையின் பொறுப்புக்கூறலை வலியுறுத்தும் பிரேரணையை மேலும் வலுப்படுத்த வேண்டும்.

அவ்விதமான செயற்பாடே ஒட்டுமொத்த தமிழினத்தின் எதிர்காலத்தினை உறுதிப்படுத்துவதாக இருக்கும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-250-299-350)

# ஜூலை முதல் புதிய பிறப்புச் சான்றிதழ்

(கொழும்பு)

எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் நாட்டில் பிறக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் புதிய பிறப்புச் சான்றிதழை வழங்குவதற்கு பதிவாளர் நாயகம் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய, ஒருவர் பிறப்பிலிருந்து இறப்பு வரையிலான அனைத்து தரவுகளும் கணனி மயப்படுத்தப்படவுள்ளதாக பதிவாளர் நாயகம் டபிள்யூ. எம். எம்.பி வீரசேகர தெரிவித்துள்ளார்.

விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் சமல் ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில், தற்போது காணப்படும் பிறப்புச் சான்றிதழை புதுப்பித்து புதிய சான்றிதழைப் பெற்றுக் கொடுக்கவுள்ளதாக பதிவாளர் நாயகம் தெரிவித்தார். (நி)

# செயன்முறைப் பரீட்சையை மே மாதம் நடத்த தீர்மானம்




(கொழும்பு)

2020 ஆம் ஆண்டு கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான செயன்முறை பரீட்சையை எதிர்வரும் மே மாதம் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மார்ச் தொடக்கம் ஏப்ரல் மாதம் வரை மாணவர்களுக்கு பயிற்சிக்குரிய காலத்தை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பி.பூஜித தெரிவித்தார்.

கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கை எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மக்கள் பங்களிப்புடன் வினைத்திறனுடைய கழிவகற்றல் பொறிமுறை விரைவில்



(நல்லூர்)

**யாழ்.மாநகர சபை முன்னெடுக்கவுள்ள வினைத்திறனான மக்கள் பங்களிப்புடன் கழிவகற்றல் பொறிமுறை விரைவில் நடைமுறைக்கு வரும்.**

யாழ்.மாநகர மக்கள் எதிர்நோக்குகின்ற மிக முக்கிய பிரச்சினையான திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவத்தை சீரமைத்து அதனை மேம்படுத்தும் நோக்குடன் மாநகர முதல்வர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனின் ஏற்பாட்டில் உருவாக்கப்பட்ட யாழ். மாநகர சபையின் புதிய திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவ பொறிமுறை தொடர்பாக மேற்பார்வையாளர்களுக்கு விளக்கம் அளிக்கும் செயலமர்வு ஒன்று அண்மையில் நடைபெற்றது.

மாநகர முதல்வர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு வட்டார ரீதியாக மாநகர சபை முன்னெடுக்கும் திண்மக் கழிவகற்றலுக்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து மேற்பார்வையாளர்களும் கலந்து கொண்டனர்.

எதிர்காலத்தில் யாழ்.மாநகரசபை முன்னெடுக்கவுள்ள மக்கள் பங்கேற்புடன் கழிவகற்றல் பொறிமுறை தொடர்பான விளக்கங்கள் எவ்வாறு குறித்த பொறிமுறை நடைபெறவுள்ளது.

அவர்களது கடமைகள் மற்றும் செயற்பாடுகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற பல விடயங்கள் கணனித் திரை மூலம் திரையிடப்பட்டு விளங்கப்படுத்தப்பட்டது.

அப்பொறிமுறையில் வட்டாரத்திற்கு என்று ஒரு தனியான கழிவகற்றல் வாகனம் மற்றும ஆளணி, பொதுமக்களுக்கு வழங்குவதற்கான நேர அட்டவணை தயாரித்தல் கழிவகற்றலில் ஏற்படும் இடர்கள் தொடர்பாக பொதுமக்கள் முறைப்பாடு செய்வதற்கான வசதி, கழிவகற்றும் போது குறித்த குடியிருப்பாளரிடம் கையொப்பம் வாங்கும் நடைமுறை, கழிவகற்றும் ஊழியர்களின் பாதுகாப்பு விடயங்கள் மற்றும் கழிவகற்றும் வாகனத்தின் பாதுகாப்பு, குறித்த வீதியில் குறித்த தினத்தில் கழிவகற்றல் நடைபெற்றதா? என்பதனை கண்காணிப்பதற்காக கண்காணிப்புப் பொறிமுறை திண்மக்கழிவகற்றல் நடைமுறைகள் மற்றும் தரம் பிரித்தல் தொடர்பாக மக்களை தெளிவுபடுத்தல் அது தொடர்பில் சமூக மட்ட அமைப்புக்களுடன் இணைந்து வட்டார ரீதியாக நடமாடும் சேவைகளை நடைமுறைப்படுத்தல்.

* திண்மக்கழிவகற்றல் பொறிமுறை சீரான பிற்பாடும் மக்கள் பொறுப்பற்ற முறையில் கழிவுப் பொருட்களை வீதியில் வீசுவதைத் தடை செய்தல், அதனை கண்காணிக்க மாநகர காவலர்களை நியமித்து இவ்வாறு பொறுப்பற்ற முறையில் நடப்பவர் இருந்து தண்டப்பணம் அறவிடல் போன்ற பல்வேறு நடைமுறைகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன் மற்றும் மாநகர செயலாளர், சுகாதாரக் குழுத் தலைவர், சுகாதாரக் குழு உறுப்பினர்கள், அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

வட்டார ரீதியாக பொதுமக்களுக்கு வழங்குவதற்கு நேர அட்டவணை தயாரித்தல் மற்றும் கழிவகற்றல் வாகனங்களை வாடகைக்கு அமர்தல் போன்ற செயற்பாடுகள் தற்போது மிக வேகமாக நடைபெற்று வருகின்றது. வெகுவிரைவில் இக்கழிவகற்றல் பொறிமுறை நடைமுறைக்கு வரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-6-33)

# நிபுணர் குழு அங்குரார்ப்பணம்

(குப்பிழான்)

சைவ அமைப்புக்களின் ஒருங்கிணைந்த கட்டமைப்பான சைவத்தமிழர் பேரவையின் திருக்கோவில் வழிகாட்டல் ஒழுங்கிற்கான பரிந்துரைகளை மேற்கொள்வதற்கான நிபுணர் குழு பல்வேறு சமய அமைப்புக்களின் பிரதிநிதிகள் கீரிமலையில் கூடி கடந்த வியாழக்கிமை மகா சிவராத்திரி நன்னாளில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்ற நீதிபதி முன்னாள் சைவப் பரிபாலன சபைத் தலைவர் சிவத்திரு.வசந்தசேனன் இந்த நிபுணர் குழுவின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கீரிமலை குழந்தைவேல் சித்தர் பீடத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கீரிமலை மெய்கண்டார் ஆதீனம் தவத்திரு உமாபதிசிவம் அடிகளார் திருமுன்னிலை வகித்தார்.

கோவிலைத் தழுவிய குடிகள் குடிகளைத்தழுவிய கோவில் என்ற மையக்கருவை சைவத் தமிழ் மக்களிடையே முன்வைக்கப்பட்டது.

இதேவேளை, தற்கால நிலைமையில் ஏனைய மாவட்டப் பிரதிநிதிகளின் கருத்துக்களைக் கேட்க வசதியாக தொடர் நிகழ்நிலை **(Zoom)** கலந்துரையாடல்களையும் முன்மொழிவு எழுத்தாவணங்களையும் அனைத்துத் தரப்பினரிடையே பெற்றுக் கொள்வது எனவும் மேற்படி நிகழ்வில் தீர்மானிக்கப்பட்டது. (5-18)

# உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் அம்பாறை மாவட்ட இளைஞர்கள்




(நல்லூர்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் நீதி வேண்டிய உணவு தவிர்ப்பு போராட்டத்தில் அம்பாறை மாவட்ட இளைஞர்கள் சிலரும் கலந்துகொண்டு தமது ஆதரவினை வழங்கியுள்ளனர்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டுமென வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டம் 15 ஆவது நாளாக நேற்றும் நடைபெற்றது.

நீதி வேண்டிய இந்த போராட்டம் நல்லூர் - நல்லை ஆதீனம் முன்பாக யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. (5-6-33)



வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தி ற்கு முன்னால் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் வடக்கு மாகாண சுகாதார தொண்டர்களின் உணவு தவிர்ப்புப் போராட்டம் 7 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது. கடந்த முதலாம் திகதியில் இருந்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்த வடக்கு மாகாண சுகாதார தொண்டர்கள் தமக்கான தீர்வு வழங்காத நிலையில் கடந்த 8 ஆம் திகதி தொடக்கம் தமது போரா ட்ட வடிவத்தை உணவு தவிர்ப்புப் போரா ட்டமாக மாற்றி முன்னெடுத்து வருகின்ற னர்.

இந்நிலையில் சுகாதாரத் தொண்டர்கள் பலரதும் உடல் நிலை நாளுக்கு நாள் தளர்வடைந்து செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (படம்:- ரவிசாந். சிவசாந்தன்)


# விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக இறை ஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் நாளை 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு மருதனார்மடம் அருள்மிகு பல்லப்ப பைரவர் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெறவுள்ளன. விசேட பூஜை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ ஸ்ரீகரசர்மாவின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒளிபரப்புச் செய்யப்படும். (5-6)




# நிர்வாகத் தெரிவு


(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் வடக்கு ஆலங்குளம் சனசமூகநிலையம் புதிய நிர்வாகத் தெரிவு நேற்று முன் தினம் சனிக்கிழமை நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் தலைவராக சி.சுதர்சன், செயலாளராக வி.குணபரன், பொருளாளர், ந.பரந்தகன், உபதலைவர் சி.கஜன், உபசெயலாளர், ப.காண்டீபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் நிர்வாக உறுப்பினர்களாக ச.விஜயகுமார், செ.சசிதரன், பி.கோகிலன், த.ரமேஷ், சி.நிரோஷன், அ.ஆத்திகன், போசகராக செ.கந்தசாமி, கணக்காய்வாளராக சி.ஜெயதாசன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (5-110)

# பாராளுமன்றம் செல்ல தயாராகிறார் ரணில்



(கொழும்பு)
ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவம் தற்போது நாட்டிற்கு அத்தியாவசியமானதாகியுள்ளது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மாத்திரமல்ல ஆளும் கட்சியிலிருந்தும் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்புரிமை பெற்றுக்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்தனர்.

எனவே நீண்ட நாள் கோரிக்கைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை கருத்தில் கொண்டும் நாட்டின் தற்போதைய நிலைமைகளை கருத்தில் கொண்டும் சாதகமான தீர்மானத்தை எடுத்துள்ளதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதனடிப்படையில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பாராளுமன்ற உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

கடந்த பொதுத்தேர்தல்களில் பின்னடைவுகளை சந்தித்திருந்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு தேசியப் பட்டியல் ஆசனமே உரித்தானது.

இந்த தேசியப் பட்டியல் ஆசனத்தில் யார் பாராளுமன்றம் செல்வது என்ற இழுபறி நிலை மிக நீண்ட காலமாக காணப்பட்டது.

இவ்வாறானதொரு நிலையில் பலரினதும் வேண்டுகோளுக்கிணங்கி தேசியப்பட்டியல் ஆசனத்தை பெற்றுக் கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளார். (நி)


## மணிவிழா நன்றி நவிலல்

யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலய முதல்வர் தி.ரவீந்திரநாதன் JP

அவர்களின் மணிவிழாவின் போது ஆசியுரைகள், வாழ்த்துரைகள், கௌரவங்கள், உதவிகள் புரிந்த மற்றும் கலந்து சிறப்பித்த அன்பு உள்ளங்களுக்கும் பாடசாலை சமூகத்தினர்க்கும் 05.03.2021 அன்று வலம்புரி நாளிதழில் சிறப்பு மலருக்கு அனுசரணை வழங்கிய கிருபா லேணர்ஸ் முதல்வர் ஆ. கிருபாகரன், இணுவில் முருகஜீவ அறக்கட்டளை ஸ்தாபகரும் சட்டக்கல்லூரி மாணவருமான ஆ. புவீஸ்வரன், வலம்புரி நிர்வாகத்தினருக்கும் ஒழுங்கமைத்து நெறிப்படுத்திய மணிவிழா சபையினருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

Thank you!

(6166)

குடும்பத்தினர்


# தமிழர்களின் நீதிக்கான கோரிக்கையை நிறைவேற்றுமாறு வலியுறுத்தி

## சென்னை பிரித்தானிய தூதரகத்தில் மனு

(சென்னை)
இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்ற தமிழர்களின் நீதிக்கான கோரிக்கையை வலியுறுத்தி இங்கிலாந்தில் சாகும் வரையிலான உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அம்பிகை செல்வகுமாரின் கோரிக்கையை நிறைவேற்றுமாறு வலியுறுத்தி சென்னை - நுங்கம்பாக்கத்திலுள்ள பிரித்தானிய தூதரகத்தில் நேற்று முன்தினம் மனு அளிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைக்கான இளையோர் கூட்டமைப்பு மற்றும் அனைத்துலக தமிழர் செயலகம் சார்பில் இந்த மனு கையளிக்கப்பட்டது.

பிரித்தானிய அரசாங்கத்துக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் கோரிக்கைகளை முன்வைத்து லண்டனில் சாகும் வரையிலான தனது உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் செயற்பாட்டாளர் அம்பிகை செல்வகுமாரின் போராட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை 16ஆவது நாளாக தொடர்கிறது.

இந்நிலையில் இந்தப் போராட்டத்துக்கு தமிழகத்திலும் ஆதரவு வலுவடைந்து வருகிறது. தமிழக அரசியல் கட்சிகள், அரசியல் தலைவர்கள், அமைப்புக்கள் மற்றும் தமிழ் உணர்வாளர்கள் அம்பிகை செல்வகுமார் போராட்டத்துக்கு ஆதரவு வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 38 செவ் 3 சூரி 6 இல்<br>உயரம்: 167cm<br>தகைமை/தொழில்: B.S.C, PH.D, Computer & Electronic Engineer, Work-Engineer (New zealand)<br>எதிர்பார்ப்பு: இலங்கையில் பிறந்து O/L இன் பின் வெளிநாடு சென்ற மணமகள், விஞ்ஞான துறைகளில் பட்டதாரியாகவும், New zealand வதிவிட உரிமை பெற்ற இலங்கைப் பிரஜை, 1993 இல் அல்லது பின்னர் பிறந்த வேளாளர், இந்துவாக இருத்தல் வேண்டும். பொறியிலாளர், மருத்துவராகவும் இருத்தல் நன்று<br>தொ.இ: B/11598 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 52 செவ் 3 சூரி 5 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L, தையல்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு கூடிய விருப்பம்<br>தொ.இ: G/1946 |
| பிறப்பு: 1986 இந்து நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: செவ் 4 சூரி 1 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L, Work-Plumer & Ele (கனடா PR உண்டு)<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண், உள்நாடு, வெளிநாடு இரண்டும்.<br>தொ.இ: B/11599 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 54 ¼ செவ் 2 சூரி 3 இல்<br>உயரம்: 5<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம் விரும்பத்தக்கது. மெக்கானிக், வெல்டிங், தச்சு வேலை, கடை விரும்பத்தக்கது.<br>தொ.இ: G/2195 |
| பிறப்பு: 1984 இந்து நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 33 செவ் 12 சூரி 8 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L Mobile Testing Engineer, U.K (P.R இல்லை)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு, உள்நாடு இரண்டும்<br>தொ.இ: B/11601 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 34 ¾ செவ் 8 சூரி 5 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: நிரந்தர தொழில், சுய தொழில், உள்நாடு மட்டும்.<br>தொ.இ: G/2201 |
| பிறப்பு: 1985 இந்து நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 16 ¼ செவ் 6 சூரி 7 இல்<br>உயரம்: 168cm<br>தகைமை/தொழில்: B.Sc Engineer, work- Civil Engineer (Singapoor)<br>எதிர்பார்ப்பு: வைத்தியர், எக்கவுண்டன், எஞ்சினியர்.<br>தொ.இ: B/11602 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 62 ¼ செவ் 7 சூரி 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: O/L, A/L(Bio), Pharmacy Course, Work-G.S (G.O.V)<br>எதிர்பார்ப்பு: A/L, அரச தொழில், உள்நாடு<br>தொ.இ: G/2206 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



## பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

### விற்பனை

எமது சங்கத்தால் உற்பத்தி செய்யப்பட்ட தரமான நல்லெண்ணெய் மற்றும் எள் ஆகியவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (C-1664)

தொடர்புகளுக்கு:- 077 460 8003/077 734 6924



## விஞ்ஞானம்

தரம் 06 – O/L
English Medium மற்றும் தமிழ்மொழி மூலம்
Mr. M. ஜெறோம்
B.Sc., NDT, Science

வருடம் முழுவதும் Zoom இல் தொடர

(6164)

077 200 9070


# பதவி வெற்றிடங்கள்

**வடக்கு மாகாண பொதுச்சேவையின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2021**

தமிழ் மற்றும் சிங்களம் மொழி மூலம் மேற்படி பதவிக்குரிய போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பம் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது. இப் பதவி வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படும். இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **2021.03.31** ஆகும்.

விண்ணப்பதாரிகள் www.np.gov.lk→ Recruitment and Exam → Advertisement என்ற வடக்கு மாகாண சபையின் இணையத் தளத்திலும் மற்றும் வடக்கு மாகாணத்திற்குட்பட்ட உள்ளூராட்சிமன்ற அலுவலகங்களிலும் மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கான ஆட்சேர்ப்புத் தொடர்பான விபரங்களை பார்வையிட்டு தகைமையுடையவர்கள் அம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

(C-1678) 15.03.2021

சி.திருவாகரன்
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்.



முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் சிவநகர் இளைஞர் கழகத்தால் நேற்று முன்னெடுக்கப்பட்ட இரத்ததான முகாமில் 37 பேர் கலந்து கொண்டு இரத்த தானம் வழங்கியுள்ளனர். (படம்:-தவசீலன்)

# ஆடைத் தொழிற்சாலையில் தொற்றாளர்கள் 23 ஆக அதிகரிப்பு

(நெளுக்குளம்)

வவுனியா ஆடைத்தொழிற்சாலையில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 23 ஆக உயர்வடைந்துள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் எம். மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா கண்டி வீதியில் அமைந்துள்ள பிரபல ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றுபவர்கள் இரண்டு பேருக்கு கொரோனாத் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றும் 21 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டதையடுத்து, அவர்களுடன் தொடர்புடையவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று வெளியாகிய நிலையில் 2 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றும் 23 பேர் தற்போது கொரோனா தொற்றாளர்களாக அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

மேலும், குறித்த ஆடைத் தொழிற்சாலையில் 1800 பேர் பணியாற்றும் நிலையில் அவர்களுள் 800 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், பிராந்திய சுகாதார திணைக்கள பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

(5-6-250)

## சட்டவிரோதமாக மணல் அகழ்வு

# டிப்பர்கள்,உழவு இயந்திரங்களுடன் 17 சாரதிகள் கைது செய்யப்பட்டனர்




(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாகப் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து பொலிஸார் சுற்றிவளைப்பினை மேற்கொண்டனர்.

இச்சுற்றிவளைப்பில் 17 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 8 உழவு இயந்திரங்களும் 9 டிப்பர்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.


கைது செய்யப்பட்டவர்கள் விசாரணையின் பின் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இச்சுற்றிவளைப்பானது ஊரியான், முரசுமோட்டை, உமையாள்புரம், உருத்திரபுரம்,திருவையாறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டது. (5-6-316)



வரலாற்றாய்வாளர் அருணா செல்லத்துரையின் "பண்டாரம்-வன்னியனார்" வரலாற்று ஆய்வு நூல் வெளியீட்டு விழா நிகழ்வு வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. (படம்:-சதீஸ்)

# சீரற்ற பாதுகாப்புத் தடையை சீர் செய்ய வேண்டுகோள்



(நெளுக்குளம்)

வவுனியா புகையிரதக் கடவையில் வீதிக்கு குறுக்காக நிறுத்தப்படும் பாதுகாப்புத்தடை சீரின்மையால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக வவுனியா நகரசபை உறுப்பினர் ஜானுயன் விசனம் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா தலைமை புகையிரத நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள கடவையில், புகையிரதம் வருகை தரும் போது பிரதான வீதிக்கு குறுக்காக நிறுத்தப்படும் பயணத்தடை முழுமையான வகையில் பொருத்தப்படவில்லை.

இதனால் வாகனங்களில் பயணிக்கும் பலர் புகையிரதம் வருகை தரப் போவதை உணர்ந்தும் பாதுகாப்பற்ற வகையில் கடவையை கடந்து செல்கின்றனர். தொடர்ச்சியாக இடம்பெறுவரும் இச்செயற்பாட்டால் விபத்துக்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகம் ஏற்பட்டுள்ளன.

குறித்த வீதியானது அதிக வாகன போக்குவரத்து நிறைந்ததாக காணப்படுகிறது.

எனவே அதனை கருத்தில் கொண்டும் விபத்துக்களை தடுக்கும் நோக்குடன், புகையிரதம் வருகை தரும் சந்தர்ப்பங்களில் குறித்த கடவையால் முற்றாக பயணிப்பதற்கு தடை ஏற்படுத்தும் வகையில் கடவையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என கேட்டுக் கொண்டார்.(5-6-299)



நீர்ப்பாசன செழிப்பு எனும் 5000 கிராமிய விவசாயக் குளங்கள் மற்றும் அணைக்கட்டுகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் சுமார் 138 குளங்களை மறுசீரமைப்பு செய்வதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய மடு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட ஊமையார் துவரங்குளம் புனரமைப்பிற்கான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஸ்டான்லி டிமேல், மடுப் பிரதேச செயலாளர் நிஜாகரன், மத்திய நீர்ப்பாசன பணிப்பாளர், விவசாய உதவிப் பணிப்பாளர், நீர்ப்பாசன பொறியியலாளர்கள், கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (படம்:-சதீஸ்)

## இராசிபலன்

15.03.2021
பங்குனி 02, திங்கட்கிழமை,
துதியை முன்னிரவு 7.01 மணிவரை
ரேவதி பின்னிரவு 4.45 மணிவரை
சுபநேரம்12.21-1.51 மணிவரை
இராகுகாலம் 7.51-9.21 மணிவரை
சந்திராஷ்டமம்: பூரம்
பங்குனித் திங்கள் வளவன்


மேஷம்

தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம் பெறலாம்,எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், வழிபட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


ரிஷபம்

இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடை பெறுவதற்கான வாய்ப்புண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு, பிரபலமானவர் களின் அறிமுகம் கிடைக்கும்;போசன நன்மையுண்டு.


மிதுனம்

தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், அரசு வழியில் அனுகூல முண்டு, உங்களின் திறமைகள் வெளிப் படும் வாய்ப்புண்டு, போசன சுக முண்டு.


கடகம்

முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், புகழ்மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், உடல் நலன் சீராகும்.


சிம்மம்

குடும்பத்தில் சிறு சிறு கருத்து முரண் பாடுகள் தோன்றி மறையும், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள்.


கன்னி

பொறுமையால் பெருமை சேரும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னே ற்றம் காண்பீர்கள், நண்பர்களின் சந்திப் பால் நன்மையுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.


துலாம்

செய் தொழில் ஆர்வம் காட்டுவீர்கள், மறைமுக எதிர்ப்புகள் விலகும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.


விருச்சிகம்

புதிய முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்,இல்லத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டு வீர்கள்.


தனுசு

பெற்றோர் மீது பிரியம் கூடும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், தொழில் வளர்ச்சிக்கு இடையூறாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பயணங்களால் பலனுண்டு.


மகரம்

விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், நட்பு வட்டம் விரிவடையும் நாள், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும்.


கும்பம்

நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், நன்மைகள் நடை பெறும் நாள், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், வரு மானம் திருப்தி தரும்.


மீனம்

நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், எதிர் பார்த்த காரியமொன்றில் தாமதம் ஏற்படலாம், திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

ஆசையின் வேகம் அனைத்தையும் பின் தள்ளும்

# 23 ஆயிரம் பெண்கள் மாயம் வெளியாகிய அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

**இலங்கையில் கடந்த 5 வருட காலப்பகுதியில் 23 ஆயிரத்து 204 பெண்கள் காணாமல் போயுள்ளமை பற்றிய அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.**

இவர்கள் காணாமல் போனமை தொடர்பில் பொலி ஸாருக்கு முறைப்பாடுகள் கிடை த்துள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

அண்மையில் கொழும்பு டாம் வீதியில் கண்டுபிடிக்கப்பட்ட தலையற்ற பெண்தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணையின் ஆரம்பத்தில் பொலிஸார், உடலை அடையாளம் காண் பதற்காக பொதுமக்களை நாடி யிருந்தனர்.

அந்த சந்தர்ப்பத்தில் சுமார் 200ற்கும் அதிகமான அழை ப்புக்கள் உள்நாட்டிலும், வெளி நாடுகளில் இருந்தும் பொலி ஸாருக்கு கிடைத்திருந்தன.

இந்த நிலையில் பொலி ஸாரின் பதிவுகளில் குறிப்பாக 2015 ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டுவரையான காலப்பகுதிக்குள் நாட்டில் 23, 204 பெண்கள் காணாமல் போயுள்ளமை பற்றி முறை ப்பாடுகள் குவிந்திருக்கின் றன. (நி)

# தடுப்பூசி பெற்றுக்கொண்டு நாட்டிற்கு வருவோரை வீடுகளில் தனிமைப்படுத்த தீர்மானம்

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து இந் நாட்டிற்கு வரும் இலங்கை யர்கள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்காக புதிய சுகாதார வழிகாட்டுதல்களை வெளியிட அரசாங்கம் தீர்மானி த்துள்ளது.

எதிர்வரும் வாரத்தில் புதிய சுகாதார வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட உள்ளதாக சுகா தார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

கொவிட் தடுப்பூசியை பெற்று க்கொண்டு இந்நாட்டிற்கு வரும் இலங்கையர்களை அவர்களது வீட்டில் சுய தனிமைப்படுத்த இதன்போது தீர்மானிக்கப்பட் டுள்ளது. (நி)

# அசாத் சாலியை விசாரிக்க குழு

(கொழும்பு)

சர்ச்சைக்குரிய கருத் தொன்றை வெளியிட்டமை தொடர்பில் முன்னாள் ஆளு நர் அசாத் சாலியிடம் வாக்கு மூலம் பெற ஜவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட் டுள்ளது.

உதவி பொலிஸ் அத்திய ட்சகர் ஒருவரின் தலை மையில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் அதி காரிகள் கொண்ட 5 பேர் அடங்கிய இந்த குழு நியமிக் கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.(நி)

# சுய நினைவற்ற நிலையில் இளைஞன் மீட்பு

(ஹற்றன்)

சிவனொளிபாதமலைக்கு வந்து காணாமல் போன இளைஞன் ஒருவரை விசேட அதிரடிப்படையினரின் உதவி யுடன் மீட்டுள்ளதாக கொத் மலை பொலிஸார் தெரிவித்த னர்.

அநுராதபுரத்தை சேர்ந்த 32 வயதுடைய இளைஞனே நேற்று முற்பகல் 10.30 மணி யளவில் மீட்கப்பட்டுள் ளார்.

ரம்பொடை ஆற்றுப் பகுதி யின் கற்பாறையொன்றிலிரு ந்து காயங்களுடன் சுயநினை வற்ற நிலையில் மீட்கப்பட்ட இளைஞன் கொத்மலை வைத் திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் மேலதிக விசா ரணைகளை முன்னெடுப்பதாக கொத்மலை பொலிஸார் தெரி வித்தனர். (நி)

# தேசியக் கொடி பொறித்த பொருட்களை உடனடியாக அகற்றக் கோரிக்கை

## இலங்கை தூதரகம் நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை தேசியக் கொடி யின் உருவத்தை தவறாகப் பயன்படுத்தியதாக வெளி யான செய்திகளைத் தொடர்ந்து, அது தொடர்பில் வோஷிங்டனின் சியாட்டி லில் உள்ள அமே சான் தலைமை அலுவலகத்தி ற்கு தெரிவிக்க அமெரி க்காவில் உள்ள இலங்கை தூதரகம் நடவடிக்கை எடுத் துள்ளது.

வணிக/அலங்கார நோக்கங்களுக்காக தேசியக் கொடியின் படத்தைப் பயன் படுத்துதல்.

இலங்கை அரசின் அறிவுசார் சொத்துரிமை களை மீறலாகும் என்றும் தூதரகம் சுட்டிக் காட்டி யுள்ளது.

இ-காமர்ஸ் தளங்களில் இருந்து சம்பந்தப்பட்ட பொருட்களை உடனடியாக அகற்றுமாறு தூதரகம் அமேசான் நிறுவனத்திடம் கோரிக்கை விடுத்தது.

மேலும் தூதரகம் அமெ ரிக்க வர்த்தகத் துறை, அமெரிக்க வர்த்தக பிரதி நிதியின் அலுவலகம் மற் றும் அமெரிக்க வெளியுறவு த்துறையின் தொடர்புடைய பிரிவுக்கு நிலைமையை தெரிவிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த விடயத்தில் தூத ரகம் முன்னேற்றங்களை கண்காணித்து வருகி றது.

மேலும் ஒன்லைனில் அந்தந்த தயாரிப்புகளின் வர்த்தகத்தை நிறுத்தும் நோக்கில் அமேசான் நிறு வனம் மற்றும் தொடர்பு டைய அமெரிக்க அரசாங்க அதிகாரிகளுடன் ஈடுபட தேவையான நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அமெரிக்காவில் உள்ள இலங்கை தூதரகம் தெரி வித்துள்ளது. (நி)




# பொன் முட்டையிடும் வாத்து

ஒரு ஊரில் ஒரு விவசாயி இருந்தான். அவன் ஒரு பேராசை பிடித்தவன். அவன் நிறைய வாத்துக்கள் வளர்த்து வந்தான்.

அந்த வாத்துக்களில் ஒன்று ஒவ்வொரு நாளும் ஒரு தங்க முட்டை இட்டு வந்தது. அந்த விவசாயி அந்த தங்க முட்டைகளை விற்றுப் பணக்காரன் ஆனான்.


வாத்து ஒவ்வொரு நாளும் ஒரு தங்க முட்டைதானே இடுகிறது. இதற்காக ஒவ்வொரு நாளாகக் காத்திருக்க வேண்டுமா? வாத்தின் வயிற்றுக்குள் தான் நிறைய தங்க முட்டைகள் இருக்கும் என யோசித்தான்.

எல்லாவற்றையும் ஒன்றாக எடுத்து விற்றால், ஒரே நாளில் மிகப் பெரிய பணக்காரன் ஆகலாம் என நினைத்தான்.

அடுத்தநாள், விவசாயி எல்லா தங்க முட்டைகளையும் ஒன்றாக எடுப்பதற்காக, ஒரு கத்தியை எடுத்தான்.

வாத்தின் வயிற்றைக் கீறினான். வாத்து துடிதுடித்து இறந்தது.

அதன் வயிற்றினுள் அன்றைய தினம் போட இருந்த ஒரே ஒரு தங்க முட்டை மட்டும் இருந்தது.



வாத்து இறந்ததனால் ஒவ்வொரு நாளும் கிடைத்து வந்த தங்க முட்டையும் அவனுக்கு கிடைக்காமல் போய் விட்டது. விவசாயி தான் செய்த முட்டாள் தனமான செயலை எண்ணிக் கவலைப்பட்டு வருந்தி "பேராசை பெரும் நட்டம் கொடுக்கும்" என உணர்ந்தான்.

**பாடம் : பேராசை பெரும் நட்டம் கொடுக்கும்.**

# மகாபாரதம்

அரசகுமாரர்களில் யுதிஷ்டிரர் மூத்தவரானப்படியால் இளவரசர் பட்டத்துக்கு அவரே உரியவரானார். பீஷ்மர், துரோணர், விதுரர் ஆகியோர் யுதிஷ்டிரரை இளவரசர் ஆக்கினர்.

இவர் சத்தியத்திற்கும், பொறுமைக்கும் இருப்பிடமாக இருந்தார். அவரது தம்பிகளும் நாட்டின் எல்லை விரிவடைய உதவினர். பாண்டவர்கள் உயர்வு கண்டு துரியோதனன் மனம் புழுங்கினான்.

விரைவில் யுதிஷ்டிரர் நாட்டுக்கு மன்னன் ஆகிவிடுவாரோ என எண்ணினான்.




தன் மனக்குமுறலை சகுனியிடமும், துச்சாதனனிடமும், கர்ணனிடமும் வெளிப்படுத்தினான்.

அதற்கு சகுனி, "பாண்டவர்களை சூதில் வெல்லலாம்" என்றான். நீண்ட யோசனைக்குப் பிறகு எப்படியாவது பாண்டவர்களை அஸ்தினாபுரத்திலிருந்து வெளியேற்ற தீர்மானித்தனர்.

துரியோதனன் தன் தந்தையிடம் சென்று "தந்தையே யுதிஷ்டிரனை. இளவரசனாக நியமித்து தவறு செய்துவிட்டீர். அதனால் பாண்டவர் இப்போது ஆட்சியுரிமைக்கு முயல்கின்றனர்.

ஆகவே என்மீதும், தம்பியர் மீதும் உங்களுக்கு அக்கறை இருக்குமேயாயின், பாண்டவர்களை சிறிது காலமாவது வேறு இடம் செல்லக் கூறுங்கள்" என்றான்.

அவன் மேலும் "கதா யுத்தத்தில் என்னை பீமன் தாக்கிய போதும், எங்கள் சார்பில் யாரும் பேசவில்லை. பாட்டனாரும், துரோணரும், கிருபரும் கூட மனம் மாறி பாண்டவர் பக்கம் போனாலும் போவார்கள்.

விதுரர் பாண்டவர் பக்கமே. இப்போதே பாண்டவர்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும். அதன் பின் மக்களை நம் பக்கம் திருப்பி நம் ஆட்சியை நிலை பெறச் செய்யலாம்" என்றான்.

மகனைப்பற்றி நன்கு அறிந்த திருதராட்டிரன் அவனுக்கு பல நீதிகளைக் கூறி "உனது துரோக எண்ணத்தை விட்டுவிடு" என்று அறிவுரை கூறினான்.

எந்த நீதியும் துரியோதனன் காதில் விழவில்லை. கடைசியில் மகன் மீது இருந்த பாசத்தால் பாண்டவர்களை வாரணாவதம் அனுப்ப ஒப்புக்கொண்டான். துரியோதனன் மூளை குறுக்கு வழியில் வேலை செய்ய ஆரம்பித்தது.

(தொடரும்)

# ஒட்சிசன் செயலிழப்பால் கொரோனா நோயாளர்கள் பரிதாபமாக உயிரிழப்பு



(கொழும்பு)

ஜோர்தானில் கொரோனா தொற்று நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் வைத்தியசாலை யொன்றில் ஒட்சிசன் செயலிழந்ததன் காரணமாக ஏழு நோயாளர்கள் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இதனால் ஜோர்தானிய சுகாதார அமைச்சர் நேற்று முன்தினம் சனிக்கிழமை பணி நீக்கம் செய்யப்பட்டார்.

மேலும் உயிரிழந்த நோயாளர்களின் நூற்றுக்கணக்கான உறவினர்கள் கோபமடைந்து வைத்தியசாலை வளாகத்தை முற்றுகையிட்டமையினால் அப்பகுதியின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பொலிஸாரும் நிறுத்தப்பட்டனர் என்று அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜோர்தான் தலைநகர் அம்மானுக்கு மேற்கே அமைந்துள்ள அரச வைத்தியசாலை யொன்றிலேயே இந்த அனர்த்தம் நேற்று முன்தினம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் பகிரங்க மன்னிப்புக் கோரிய அந் நாட்டு பிரதமர் பிஷர் அல் கஸ்வானே, இந்தச் சம்பவத்துக்கு தனது அரசாங்கம் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டதாகவும், சுகாதார அமைச்சர் நாதிர் ஒபிதாட்டை பணிநீக்கம் செய்ததாகவும் கூறினார்.

பிரிட்டனில் முதன்முதலில் அடையாளம் காணப்பட்ட கொரோனா வைரஸ் மாறுபாடு வேகமாக பரவுவதை தடுக்க ஜோர்தான் விரைவான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. (நி)

# அஸ்ட்ரா ஜெனேகா தடுப்பூசியை சில நாடுகள் தடை செய்துள்ளன

## இது குறித்து ஆராய்வதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவிப்பு

(கொழும்பு)

அஸ்ட்ராஜெனேகாவின் தடுப்பூசி குறித்து உலக சுகாதார ஸ்தாபனம் முக்கிய தகவலொன்றை வெளியிட்டுள்ளது.

அஸ்ட்ரா ஜெனேகாவின் தடுப்பூசியை பயன்படுத்துவதை உலக நாடுகள் சில இடை நிறுத்தியுள்ளமை குறித்து ஆராய்ந்து வருவதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

குறித்த தடுப்பூசியை பெற்ற சிலர் குருதி உறைவினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இதுவே தடுப்பூசியை தடை செய்ய காரணம் எனவும் ஐரோப்பிய நாடுகள் தெரிவித்துள்ளன.

மேலும், குறித்த தடுப்பூசி உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிபுணர்கள் ஆலோசனை குழுவின் பேச்சாளர் அஸ்ட்ரா ஜெனேகா தடுப்பூசி மிகச் சிறந்ததென்பதோடு, அஸ்ட்ரா ஜெனேகா தடுப்புமருந்தினை நாங்கள் தொடர்ந்து பயன்படுத்தவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (நி)

# சிங்கத்திற்கு மயக்க மருந்து கொடுத்து போட்டோ எடுத்த புதுமணத் தம்பதி

## பாகிஸ்தானில் கடும் எதிர்ப்பு


(லாகூர்)

சிங்கக்குட்டிக்கு மயக்க மருந்து கொடுத்து, அதனுடன் போட்டோவுக்கு போஸ் கொடுத்த புதுமணத் தம்பதிக்கு பாகிஸ்தானில் கடும் எதிர்ப்பு கிளம்பி உள்ளது.

பாகிஸ்தானின் லாகூரில் ஒரு ஜோடிக்கு சமீபத்தில் திருமணம் நடந்தது. புதுமணத் தம்பதிகள் சிங்கக் குட்டியுடன் மேடையில் போட்டோ எடுத்துக் கொண்டது தற்போது பெரும் சர்ச்சையையும் எதிர்ப்பையும் ஏற்படுத்தி உள்ளது. (நி)



# ரயிலில் தீ விபத்து



(டில்லி)

இந்தியா தலைநகர் டில்லியில் இருந்து தேஹ்ரடுன் நோக்கி சென்று கொண்டிருந்த சதாப்தி எக்ஸ்பிரஸ் ரயிலில் மின்கசிவு காரணமாக பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

சி-4 பெட்டியில் தீ பிடித்து பற்றி எரிந்துள்ளது. இச்சம்பவம் 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

உடனடியாக செயற்பட்ட மீட்புப் பணியாளர்கள், பயணிகள் அனைவரையும் காயங்கள் எதுவும் ஏற்படாமல் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளதாக உத்தரகாண்ட் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)

# தென்னிந்திய திரைப்பட இயக்குநர் எஸ்.பி. ஜனநாதன் காலமானார்

(சென்னை)

இந்திய தேசிய விருது பெற்ற தென்னிந்திய திரைப்பட இயக்குநர் எஸ்.பி ஜனநாதன் நேற்று காலமானார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மூளையில் இரத்தக் கசிவு ஏற்பட்டிருந்த நிலையில் அவர் ஆபத்தான நிலையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந் நிலையில் நேற்று அவர் காலமானார்.



இயற்கை, பேராண்மை, புறம்போக்கு, ஈ போன்ற படங்களை அவர் இயக்கி புகழ் பெற்றிருந்தார்.

இவருடைய முதல் படமான இயற்கை தேசிய விருதினை வென்றது.

தற்போது விஜய் சேதுபதி நடிக்கும் லாபம் படத்தின் இறுதிக்கட்டப் பணிகளில் ஈடுபட்டிருந்த நிலையில் திடீர் உடல் நிலைப் பாதிப்புக்கு உள்ளாகியிருந்தார்.

இந்நிலையில் அவர் உயிரிழந்துள்ளமை திரைத்துறையில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (நி)

# சுகாதார விதிமுறைகளை பின்பற்றாவிடில் விமானத்தில் பயணிக்க அனுமதியில்லை

## விமானப் போக்குவரத்து இயக்குநரகம் எச்சரிக்கை

(சென்னை)

கொரோனா தடுப்பு வழிமுறைகளை பின்பற்றாவிட்டால் விமானத்தில் பயணிக்க அனுமதி இல்லை என விமானப் போக்குவரத்து இயக்குநரகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து வெளியிட்ட அறிக்கையில், பயணங்களின் போது சில விமானப் பயணிகள் முகக்கவசம் அணியாமலும், சமூக இடைவெளியை பொருட்படுத்தாமலும் இருப்பது தெரியவந்துள்ளது.

பலமுறை அறிவுறுத்திய பிறகும் பயணிகள் பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றவில்லை என்றால், அவர்கள் விமானத்தில் பயணிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விமானம் புறப்பட்ட பிறகு அலட்சியமாக இருக்கும் பயணிகள், அத்துமீறுபவர்களாக கருதப்பட்டு, அதன்பின்னர் விமானப் பயணத்திற்கு தகுதி அற்றவர்களாக அறிவிக்கப்படுவார்கள் எனவும் கடும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. (நி-4)

# பூமியை நோக்கி நகரும் சிறுகோள்

## நாசா நிறுவனம் அறிவிப்பு

(வோஷிங்டன்)

எதிர்வரும் மார்ச் மாதம் 21 ஆம் திகதி புதிய வகை கோளொன்று பூமியை நோக்கி நகர உள்ளதாக நாசா நிறுவனம் அறிவித்துள்ளது.

பூமியிலிருந்து இருபது இலட்சம் கிலோமீற்றர் தொலைவில் உள்ள இக்கோள் எதிர்வரும் மார்ச் 21ஆம் திகதி பூமியை கடந்து செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சிறுகோள் பூமியை கடக்கும் போது மணிக்கு சுமார் 1,23,000 கிலோ மீற்றர் வேகத்தில் கடந்து செல்லும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

சூரியக் கதிர்கள் இக் கோளின் மீது படும்போது வெளியாகும் பிரதிபலிப்பின் மூலமே இந்த சிறு கோளின் தன்மையை தெரிந்து கொள்ள முடியும் எனவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி)

## மட்டு.விமான நிலையத்தை

# சர்வதேச விமான நிலையமாக மாற்ற இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும்

## சாணக்கியன் கோரிக்கை

(கொழும்பு)

மட்டக்களப்பு விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க இந்தியா அழுத்தம் தெரிவிக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக் களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கோரிக்கை விடுத்துள் ளார்.

இந்திய உயர்ஸ்தானிகரையும் முக்கிய உறுப்பினர்களையும் நேற்று முன்தினம் சனிக்கிழமை, திருகோணமலையில் சந்தித்து பேசியபோதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், வட கிழக்கு சம்பந்தமான பல விடயங்கள் மற்றும் பிரச்சினைகள் குறித்தும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டிருந்தது. அதில் முக்கியமாக தமிழ் மக்களின் காணி அபகரிப்பு, தொல்பொருள் மற்றும் மகாவலி திட்டம் சம்பந்தமான பிரச்சினைகள் குறித்தும் இந்திய தூதுவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

அத்துடன் மட்டக்களப்பு விமான நிலையத்தை, சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க இந்தியா அழுத்தம் தெரிவிக்க வேண்டும் எனவும் உள்ளூர் பயண சேவைகளை இதன்மூலம் உருவாக்குவதோடு சென்னைக்கான பயண கட்டமைப்புக்களை இங்கிருந்து ஏற்படுத்துவதன் மூலம் உல்லாச பிரயாண துறையினை மேலும் அபிவிருத்தி செய்வதோடு இதன்மூலம் பல தொழில்வாய்ப்புக்களை உருவாக்கலாம் எனவும் இரா. சாணக்கியன் இந்தச் சந்திப்பின்போது தெரிவித்திருந்தார். (நி)

# உயர்தர மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைகள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இடம் பெறவிருந்த கல்விப் பொதுத்தராதர உயர்தர மற்றும் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைகளை ஒத்தி வைப்பதற்கு பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

கல்வி அமைச்சரின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது. கொரோனா அச்சம் காரணமாக பாடத்திட்டங்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்திற்குள் நிறைவு செய்வது சவாலானது என்பதால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக பரீட்சைகள் திண்ணக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (நி)

# புராண படனத்தை உயிர்மூச்சாய் ஓதியவர் அமரர் கெஜரெத்தினம்



## மறைந்தார் மாண்பு

கடந்த 13.02.2021 இல் இணுவிலில் தனது 106ஆவது வயதில் காலமான அமரர் கயிலாயபிள்ளை கெஜரெத்தினம் அவர்கள் பற்றிய சிறு குறிப்பு

இணுவில் நாடகக் கலைஞரான வி.எம். சுப்பையா, கண்டி ராசசிங்கன் வி.எம். நாகலிங்கம் ஆகியோரின் சகோதரியை திருமலை நிலாவெளியில் விவாகம் செய்தார்.

அமரர் கெஜரெத்தினம் நிலாவெளியில் 15.03.1914 அன்று பிறந்தார். கட்டுக் குளம்பற்று, கும்புறுபிட்டி, குச்சவெளி, திரியாய் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய பகுதியில் முதலாவது ஆசிரியராகத் தெரிவு செய்யப்பட்டு அரும்பணியாற்றினார்

திருகோணேஸ்வரத்தின் பணிக்காக தமிழ்நாட்டிலிருந்து மன்னன் குளக் கோட்டனால் அழைத்துவரப்பட்டு நிலாவெளியில் குடியமர்த்தப்பட்ட கனகசுந்தரப் பெருமாளின் வழித்தோன்றலே இவர்.

ஆசிரியராக, அதிபராக, கூட்டுறவாளனாக, கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராக, ஆலய பரிபாலனசபைத் தலைவராக என வாழ்ந்து தொண்டாற்றியவர்.

அன்னார் 37 ஆவது வயதில் கந்த புராண படனத்தில் ஈடுபட்டவர். 42 ஆவது வயதில் பயன் உரைக்கத் தொடங்கி இறுதிக்காலம்வரை தொடர்ந்து பயன் சொல்லி வந்தார். நிலாவெளியிலிருந்து இடம் பெயர்ந்த காலத்தில் திருமலை முத்துக்குமாரசுவாமி கோயிலிலும் யாழ்ப்பாணத்தில் வந்து வாழ்ந்த காலத்தில் இணுவில் மஞ்சத்தடி முருகன் கோவிலி லும் பயன் உரைத்தவர். 2014 ஆம் ஆண்டு நூறாவது வயதிலும் இணுவில் மஞ்சத்தடி முருகன் கோவிலில் தொடர்ச்சியாக பயன் உரைத்தவர்.

திருகோணேஸ்வரத் திருவிழாவின் கட்டுக்குளம்பற்றுக் கிழக்கு சைவ அடியார்களின் உபயமான 10ஆம் திருவிழாவை மக்கள் ஒத்துழைப்புடன் பல வருடங்களாக முன்னின்று நடத்தியவர்.

இறுதி மூச்சுவரை மிக நிதானமாக, ஞாபகசக்தி குறையாமல் இருந்தவர். இவருடைய பெரிய ஆதங்கம் இளைஞர்கள் புராணபடனத்தில் ஆர்வம் காட்டாதமையும் புராணப்படிப்புக்கள் அருகிக்கொண்டு போவதும் பற்றியதாகும்.

அன்னாரது வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சி அவரது 107ஆவது பிறந்தநாளான இன்றைய நாளில் நடைபெறுகின்றது.

**கை. சிறிவரதன்.**

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2254

### பவித்திரா

வெயில்ல உருகி காணாமல்போற குச்சி ஐஸ் மாதிரி ....



1 ஆம் திகதி வாங்குற சம்பளம் 5 ஆம் திகதியே காணாம போயிடுது...

### கலைக்ஸ்


நாம யாரை நம்பிறமோ அவங்கதான் நம்மள ஏமாத்திறாங்க மாமா. என்ன மாப்பிளை லவ் பெயிலியரா...



என்னது லவ்பெயிலியரா .எங்க அம்மா நேத்து பூரி செய்யிறன்னு சொல்லிட்டு செய்யாம விட்டத சொன்னேன் மாமா...!

### பாபுதரன்

எப்படா வீட்டை விட்டு வெளியே போகலாம் என்கிற பருவத்தில் ஆரம்பித்து...!




எப்படா வீட்டுக்கு போய் படுப்போம் என்பதாக முடிகிறது வாழ்க்கை...!

### கவிதாயினி

கடவுள் படைச்சதில எனக்கு புடிச்சது 2 விசயம் தான் வாயும் வயிறும்..



மனுசன் படைச்சதில எனக்கு புடிச்ச 2 விசயம் அது சோறும் குழம்பும்...!

### வரதன்

தினமும் சூரிய உதயத்திற்கு முன்பு எழுந்தால் சகல செல்வங்களும் தேடி வரும்...



அப்படியென்றால் பேப்பர் போடுபவர் பி.எம் .டபிள்யூ காரில் தான் சுற்ற வேண்டும்..!

### குயினா

யாரோ... பெரும்புள்ளி ஆவதற்கு நமது விரல்களில் கரும்புள்ளி...!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கொவிட் தடுப்பூசி பெற்றவர்களில் 30 பேருக்கு குருதி உறைவு

## பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் கொவிஷீல்ட் தடுப்பூசி ஏற்றிக் கொண்டவர்களில் இதுவரை 30 பேருக்கு குருதி உறைதல் ஏற்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அந்த சங்கத்தின் செயலாளர் மகிந்த பாலசூரிய ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி செலுத்தப்பட்டதன் பின்னர் ஏற்படும் சிக்கல் நிலைமைகள் குறித்து, சுகாதாரத்துறை அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தற்போது நாடு முழுவதும் சுகாதார அமைச்சின் பரிந்துரையின் அடிப்படையில் கொரோனா நோயை தடுப்பதற்காக கொவிஷீல்ட் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த நடவடிக்கைகளுக்கு மத்தியில் சில ஒவ்வாமை தன்மைகள் குறித்து அறிக்கையிடப்படுகின்றன.

அதன்படி, 30 பேருக்கு குருதி உ'றைதல் ஏற்பட்டுள்ளது. அதுதவிர காய்ச்சல் மற்றும் உடல் வலி போன்ற நிலைமைகளும் காணப்படுகின்றன. அவை சாதாரணமானவை என தொற்று நோய் விஞ்ஞான பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறிருப்பினும் இலங்கையில் பதிவான குறித்த எண்ணிக்கையானது, ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது மிகவும் குறைந்தளவானது என்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் மகிந்த பாலசூரிய தெரிவித்துள்ளார். (நி)

# வடக்கின் காணி ஆவணங்கள் அநுராதபுரத்திற்கு மாற்றப்பட்டமைக்கு காணியமைச்சர் பதிலளிக்க வேண்டும்

(கொழும்பு)

வடக்கிலுள்ள நான்கு மாவட்டங்களின் காணி ஆவணங்கள் அநுராதபுரத்திற்குக் கொண்டு செல்லப்பட்டமை தொடர்பாக அநுராதபுர பாராளுமன்ற உறுப்பினர், காணியமைச்சர் சந்திரசேன பதிலளிக்க வேண்டும் எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.



இந்த விடயம் தொடர்பாக நேற்று ஞாயிற்றுக் கிழமை டுவிட்டரில் பதிவிட்டுள்ள மனோ, "யாழ்ப்பாணத்திலிருந்த வட மாகாண பிராந்திய காணி சீர்திருத்த ஆணைக்குழு அலுவலகம், இப்போது யாழ்.மாவட்ட அலுவலகமாக குறைக்கப்பட்டு, வடக்கின் ஏனைய நான்கு மாவட்டங்களின் ஆவணங்கள் அநுராதபுரத்திற்கு கொண்டு செல்லப்பட்டமை தொடர்பாக அநுராதபுர பாராளுமன்ற உறுப்பினர் காணியமைச்சர் சந்திரசேன பதிலளிக்க வேண்டும்" என பதிவிட்டுள்ளார்.

கடுமையான எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் தமிழர் தாயகத்தின் வடக்கு மாகாணத்திற்குரிய அனைத்து காணிகளுக்கான ஆவணங்களும் அநுராதபுர மாவட்ட செயலகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

கடந்த 4 ஆம் திகதி ஆவணங்களை எடுத்துச் செல்ல முற்பட்ட போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் பொது மக்களும் யாழ்.செயலக வாசலுக்கு முன்பாக ஒன்று கூடி கடும் எதிர்ப்பு வெளியிட்டனர்.

இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை மாலை அவசர அவசரமாக அனைத்து ஆவணங்களும் அநுராதபுர மாவட்ட செயலகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுகிறது சு.க.?

(கொழும்பு)

நாட்டில் அடுத்து நடைபெறவுள்ள மாகாண சபைத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தனித்துப் போட்டியிடக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் சுதந்திரக்கட்சி தலைமையகத்தில் கடந்த வியாழக் கிழமை நடைபெற்ற விசேட கூட்டமொன்றிலும் இவ்விடயம் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

மேலும், சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிட விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருவதற்கும் இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளதாக அக்கட்சி தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான கூட்டணியில் சுதந்திரக்கட்சி பங்காளியாக இருப்பதால் கூட்டணியாகத் தேர்தலை எதிர்கொள்வதற்கு அழைப்பு விடுக்கப்படும் பட்சத்தில் அது குறித்து பரிசீலிக்க வேண்டும் என்பதுடன்



தேவையான இட ஒதுக்கீடுகள் கிடைக்காத பட்சத்தில் தனி வழி செல்வதே சிறந்தது எனவும் கருத்துகள் குறித்த கூட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளதாக அக்கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மனம் அடங்குமா?

ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவர் ஒரு பூனை வளர்த்தார். ரொம்பச் செல்லமாக அவர் அந்த பூனையை வளர்த்தார்.

அவர் என்ன செய்வார் தெரியுமா?

இரவு நேரத்திலே...அந்தப் பூனையுடைய தலையில் ஒரு விளக்கை வைத்துவிடுவார். அந்தப் பூனை ரொம்ப ஜாக்கிரதையாக அந்த விளக்கு கீழே விழுந்துவிடாமல் பார்த்துக்கொள்ளும்.

தலையை ஆட்டாமல் ரொம்ப நிதானமாக ராஜா பின்னால் நடந்து போகும். ராஜா அந்த விளக்கு வெளிச்சத்தில் அனைத்து வேலைகளையும் செய்துவிடுவார். கையிலே ஒரு விளக்கைத் தனியாக எடுத்துக்கொண்டு போகவேண்டிய அவசியமில்லை.

விளக்கைத் தூக்கிச் செல்லுகின்ற வேலையை அந்தப் பூனையே பார்த்துக் கொள்ளும். அதனால் ராஜாவுக்கு அந்தப் பூனை மேல் ரொம்பப் பிரியம்.

மந்திரிகளை அழைத்து அவர்களிடம் சொல்லுவார்...

பார்த்தீர்களா இந்தப் பூனை எவ்வளவு விசுவாசமாக நடக்கிறது. என்பேரில் எவ்வளவு மரியாதை பார்த்தீர்களா அதற்கு? என்றார்.

இதைக்கேட்டு அங்கேயிருந்த அமைச்சர்களில் ஒருத்தர் சொன்னார்.

மன்னா நீங்கள் சொல்வது சரிதான்.. இருந்தாலும் அந்தப் பூனையுடைய விசுவாசத்தை நான் கொஞ்சம் சோதித்துப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன் என்றார்.

சரி உங்கள் ஆசையை ஏன் கெடுக்க வேண்டும்? நன்றாக சோதித்துப் பாருங்கள் என்றார் ராஜா.

உடனே அந்த அமைச்சர் என்ன செய்தார் தெரியுமா? எங்கேயோ புறப்பட்டுச் சென்றார். ஒரு ஐந்தாறு எலிகளைப் பிடித்துக்கொண்டு வந்தார்.

அரண்மனையில் ராஜா ஏதோ வேலை பார்த்துக் கொண்டிருந்தார். பக்கத்திலே அந்தப் பூனை ரொம்பப் பணிவாக நின்றுகொண்டிருந்தது. அதன் தலையிலே விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

அமைச்சர் தான் பிடித்துக்கொண்டு வந்த எலிகளை அந்தப் பூனையின் பார்வையில் படும்படியாக எதிரிலே விட்டார். அந்த எலிகளெல்லாம் அங்கும் இங்கும் ஓட ஆரம்பித்தன.

அதைப்பார்த்தது அந்தப் பூனை. அவ்வளவுதான். தலையில் இருக்கும் விளக்கைப் பற்றியும் கவலைப்படவில்லை... ராஜாவைப் பற்றியும் கவலைப்படவில்லை...

ஒரே பாய்ச்சலாக பாய்ந்து எலிகளைத் துரத்த ஆரம்பித்து விட்டது. தலையிலே இருந்த விளக்கு எங்கேயோ போய் விழுந்தது. அணைந்து போனது.

இருட்டில் ராஜா தடுமாற ஆரம்பித்தார். இந்த சமயத்தில் அந்த அமைச்சர் மறுபடியும் விளக்கை ஏற்றினார். வெளிச்சம் வந்தது. அதற்குப் பிறகு அந்த அமைச்சர் பேசினார்.

அரசே...பூனையுடைய விசுவாசத்தைப் பார்த்தீர்களா? எலி அதனுடைய கண்ணில் படுகின்ற வரைக்கும் தான் அதன் விசுவாசம் இருந்த மாதிரித் தெரிந்தது.எலியைப் பார்த்ததும் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அதைத் துரத்த ஆரம்பித்து விட்டது என்றார்.

தான் அந்தப் பூனையைப் பற்றி நினைத்தது தவறு என்பது அதற்குப்பின் ராஜாவுக்குப் புரிந்தது.

சரி.. இப்போ எதற்கு அந்தக் கதையெல்லாம் என்கிறீர்களா? இந்தப் பூனை மாதிரி தான் நமது மனமும்.

மனதை எவ்வளவு தான் பயிற்சி கொடுத்துப் பக்குவமாக வைத்திருந்தாலும் பார்ப்பதற்கு பரம சாது மாதிரித் தான் இருக்கும். பார்க்க வேண்டியதைப் பார்த்து விட்டது என்றால் பாய்ந்துவிடும். இந்தப் பூனை மாதிரி.

புலன் இன்பப் பொருள்கள் கிட்டாத வரைக்கும் மனம் அடங்கியிருக்கிறது மாதிரித் தான் தெரியும். கொஞ்சம் வாய்ப்புக் கிடைத்தாலும் அது குதித்துக் கூத்தாடும்.

பெரிய பெரிய முனிவர்கள் வாழ்க்கையிலே நடந்த வீழ்ச்சி இதைத்தான் நிரூபிக்கிறது. புலன்களின் ஆற்றல் அதிகம். அதனாலே மனக்கட்டுப்பாடு பயிற்சிகளிலே ரொம்ப எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்கிறார் சுவாமி சிவானந்தர்.

மதுப்பழக்கத்தையே விட்டுவிட்டேன் என்று உறுதியாக இருப்பான். கடை கண்ணில் தென்பட்டால் கால் அவனை கேட்காமலே இழுத்துக்கொண்டு உள்ளே போய்விடும்.

இது தான் மனது என்பது... அதுதான் ராஜா வளர்த்த பூனை.

நமது ஆள் ஒருத்தன் ராஜா பூனை தலையிலே விளக்கை வைத்த மாதிரி இவன் தன்னுடைய தலையிலே.. ஒரு விளக்கை ஏற்றி வைத்துக்கொண்டு எதையோ தேடிக்கொண்டிருந்தான்.

தலையை ஆட்டாமல் நிதானமாக நடந்து.. ரொம்ப நேரமாகத் தேடிக்கொண்டிருந்தான்.

அந்த சமயம் அங்கே வந்த ஒருத்தர் "என்ன தேடுகின்றீர்கள் " என்று கேட்டார்.

"அது தான் மறந்து போய்விட்டது..!" இழுத்தான்.

"சரி கொஞ்சம் இப்படி உட்காருங்கள். ஞாபகம் வந்ததும் தேட ஆரம்பிக்கலாம்!" என்றார் அவர்.

இவன் கொஞ்ச நேரம் உட்கார்ந்து யோசித்தான்.அதன் பிறகு திடீரென்று எழுந்து நின்றான்.


"ஞாபகம் வந்து விட்டது" என்றான். .

"என்ன" என்று கேட்டார்.

"எங்களுடைய வீட்டில் உள்ள விளக்கை எங்கே வைத்தேன் என்று தெரியவில்லை... அதைத்தான் தேடிக்கொண்டிருக்கிறேன்.. ஏற்றி வைக்கலாமென்று பார்க்கிறேன்..!" என்றார்.

# 07 புதிய கலப்பு விகிதாசார தேர்தல் முறைமையும் கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலும் - 2018

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



அவ்வாறு விழுவன மாவட்ட ரீதியில் கம்பஹாவில் 1 கிராம உத்தியோகத்தர் பிரிவும், களுத்துறையில் 8ம்,கண்டியில் 24ம், மாத்தளையில் 9ம், நுவரெலியாவில் 24ம்,மாத்தறையில் 5ம், யாழ்ப்பாணத்தில் 8ம்,வவுனியாவில் 8ம்,அம்பாறையில் 4ம், திருகோணமலையில் 3ம், குருநாகலில் 1ம், புத்தளத்தில் 3ம், அநுராதபுரத்தில் 12ம்,பதுளையில் 11ம், இரத்தினபுரியில் 16ம் ஆக மொத்தம் 137 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் பிரிக்கப்பட்டு இரு உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்குள் விழுகின்றன. இவ்வாறு வட்டாரங்களை எடுத்தால் 144 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் பிரிக்கப்பட்டு இரண்டு அல்லது மூன்று வட்டாரத்திற்குள் போய்விடுகிறது.

சில சமயங்களில் ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவு இரு அல்லது மூன்று துண்டுகளாக்கப்பட்டு இரண்டு அல்லது மூன்று வட்டாரத்திற்குள் போய் விடுகிறது.இவ்வாறு 144 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இரண்டு அல்லது மூன்று வட்டாரத்திற்குள் பிரிக்கப்பட்டுள்ளன. இதே போல் 137 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் பிரிக்கப்பட்டு இரு உள்ளூராட்சி அதிகார சபைகளுக்குள் விழுகின்றன.

## உள்ளூராட்சி அதிகாரசபைகளின் வட்டாரங்களின் எண்ணிக்கையில் சமநிலை பேணப் படாமை.

2012இல் தேசிய எல்லை நிர்ணயக் குழுவினால் உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு வட்டாரங்களுக்கான உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும் போது 2012இல் அவ் அவ் உள்ளூராட்சி அதிகார சபைகளில் இருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கையும் மற்றும் சனத்தொகையும் கணக்கில் எடுத்தே சபைகளின் வட்டாரங்களுக்கான உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டது. உள்ளூராட்சி அதிகார சபைகளில் 2012 வரையில் உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கிடையே உறுப்பினர்களின் எண்ணிக் கை யில் சமநிலை காணப்படவில்லை.

இதனால் 2015ல்,சபைகளுக்கு வட்டாரங்களுக்கான உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும் போதும் (சனத்தொகை விகிதாசாரத் திற்கேற்ப) சமநிலை காணப்படாமல் தீர்மானிக்கப்பட்டு விட்டது. இதனால் பல உள்ளூராட்சி அதிகாரசபைகளில் உள்ள மக்கள் தங்களுக்கு அநீதி விளைவிக்கப்பட்டுள்ளதாக கூறுகிறார்கள். இக் குறைபாடு அடுத்த தேர்தலுக்குமுன் சரிசெய்யப்படவேண்டும்.

சபைகளுக்கு வட்டாரங்களுக்கான உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும் போது (சனத்தொகை விகிதாசாரத்திற்கேற்ப) சமநிலை காணப்படாமல் தீர்மானிக்கப்பட்டுவிட்டது. இதனால் பல உள்ளூராட்சி அதிகார சபைகளில் உள்ள மக்கள் தங்களுக்கு அநீதி விளைவிக்கப்பட்டுள்ளதாக கூறுகிறார்கள். இக் குறைபாடு அடுத்த தேர்தலுக்கு முன் சரிசெய்யப்பட வேண்டும்.

## மீளாய்வுக்குழு அறிக்கைக்கு எதிராக வழக்குத் தாக்கல்

உள்ளூராட்சி அதிகாரசபைகள் தேர்தல்கள் அலுவல்களை 2017 ஆம் ஆண்டினுள் நடத்துவது தொடர்பில் தேவையான சட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அதனோடு தொடர்புடைய உள்ளூராட்சி அதிகாரசபைகள் தாபித்தல் பற்றி வர்த்தமானி பத்திரத்தில் வெளியிடப்படாமை காரணமாக அது பிற்போடப்படும் போக்கொன்றை காண முடிந்தது.

இருப்பினும் இது தொடர்பாக மக்கள் அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களிடையே அதிருப்தி மேலோங்கிக் காணப்பட்டபோது ஊடகங்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் இது தொடர்பில் விடயங்களை முன்வைத்து தேர்த்லை நடத்துவதற்கான அழுத்தங்களை மேற்கொண்டனர். இதற்கமைய அரசாங்கத்தால் உள்ளூராட்சி அதிகார சபைகளை தாபித்தல் சம்பந்தமான வர்த்தமானி அறிவித்தல் (இலக்கம் 2025/35) 2017.06.30 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

அதனோடு தொடர்புபட்ட மற்றைய 2043/56 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் 2017.11.02 ஆம் திகதி வெளியிடப்பட்டது. அதற்கமைய 341 உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்கான பூர்வாங்க அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டன.

உள்ளூராட்சி அதிகாரசபைகளின் வட்டார எல்லை நிர்ணயதேசிய குழுவின் அறிக்கையை மீளாய்வு செய்வதற்காக விடயப் பொறுப்பு அமைச்சரால் நியமனம் செய்யப்பட்டிருந்த குழுவின் அறிக்கைக்கு (மீளாய்வுக் குழுவின் அறிக்கைக்கு) எதிராக பிரஜைகள் சிலர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் **CA/WRIT/373/2017** ஆம் இலக்க மனுவொன்றைச் சமர்ப்பித்ததன் பின்னர் உயர் நீதிமன்றம் அவ்வறிக்கைக்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் தடையுத்தரவொன்றை 2017.11.22 ஆம் திகதி வெளியிட்டது. இதன் காரணமாக தேர்தலைமேலும் பிற்போடுவதற்கு நேரிடுமெனக் கருதப் பட்டது.

**உள்ளூராட்சி மன்றதேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 அதிகார சபை) 3(ஈ) பிரிவின் கீழ் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கமைய உள்ளூராட்சிமன்ற வட்டார எல்லை நிர்ணயம் தொடர்பில் செப்டெம்பர் 2017இல் அமைக்கப்பட்ட குழு**

தேசிய எல்லை வரையறைக் குழுவினால் தயாரிக்கப்பட்டஅறிக்கை 2015 ஒகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி ஜனாதிபதியால் வெளியிடப்பட்டது.

அவ் அறிக்கையில் உள்ள எழுத்துப் பிழைகளையும்,2017 பெப்ரவரி 17 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மீளாய்வுக் குழுவின் அறிக்கையில் உள்ள எழுத்துப் பிழைகளையும் திருத்துவதற்கு உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 அதிகார சபை) 3(ஈ) பிரிவின் கீழ் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற அமைச்சருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கமைய உள்ளூராட்சி மன்ற வட்டார எல்லை நிர்ணயம் தொடர்பில் செப்டெம்பர் 2017ல் ஒரு குழு நியமிக்கப்பட்டது.இக் குழுவில் நானும் ஒரு உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இக் குழுவின் அறிக்கை 2047/51 இலக்க வர்த்த மானி அறிவித்தல் மூலம் 2017.12.02 வெளியிடப்பட்டது.

2017 பெப்ரவரி 17 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மீளாய்வுக் குழுவின் அறிக்கையில் உள்ள எழுத்துப் பிழைகளையும் திருத்துவதற்கு உள்ளூராட்சிமன்ற அமைச்சரினால் செப்டெம்பர் 2017இல் ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக் குழுவின் அறிக்கை 2047/51 இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2017.12.02 வெளியிடப்பட்டது.

## நீருக்குள் மூழ்கிப்போன கிராம உத்தியோகத்தர் அலகுகள் :-

2017ம் ஆண்டு மொரகஹாகந்த அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மாத்தளை மாவட்டத்திலுள்ள நாவுல பிர தேச செயலகத்திற்குட்பட்ட 401 - கம்பரவ, 401 A -கல்பொருகொல்ல, 407- எல கமுவ, 407 A - தலாகொட 407 B -கடவத்த, 407 C - மெதபிஹில்ல ஆகிய 6 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் நீர்த்தேக்கத்திற்குள் உள்வாங்கப்பட்டு விட்டன. அதே போல் லக்கல- பல்லேகம பிரதேச செயலகத்திற்குட்பட்ட 397 B - கோனவல மற்றும் 397 C - கரந்தமுல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் களுகங்க அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நீர்த்தேக்கத்திற்குள் உள்வாங்கப்பட்டு விட்டன. இதனால் உள்ளூராட்சி மன்ற வட்டார எல்லை நிர்ணயம் தொடர்பில் செப்டெம்பர் 2017இல் நியமிக்கப்பட்ட குழுவிற்கு நாவுல பிரதேசசபை மற்றும் லக்கல- பல்லேகம பிரதேசபை ஆகியவற்றின் வட்டாரங்களின் எல்லைகளில் திருத்தம் செய்ய வேண்டிஏற்பட்டது.

## 93 உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கான தேர்தல்

உள்ளூராட்சி அதிகாரசபைகளின் எல்லை நிர்ணயத்திற்கான தேசிய குழுவின் அறிக்கைக்குரிய வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சபைகளில் மீளாய்வுக் குழுவினால் எவ்வித எல்லைகளின் திருத்தங்களும் செய்யப்படாத உள்ளூராட்சி அதிகார சபைகள் மற்றும் எழுத்துப் பிழை திருத்தங்கள் செய்ய அவசியமற்ற 93 சபைகள் காணப்பட்டமையினால் நீதிமன்ற தடையுத்தரவு இந்த 93 உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கான வேட்புமனுக் கோரல்' அறிவித்தலை வெளியிடுவதற்கு தடையில்லை எனத் தீர்மானித்த தேர்தல் ஆணைக் குழு அதற்கமைய வேட்புமனு அறிவித்தலை 2017.11.27 ஆம் திகதி வெளியிடுமாறு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு தேர்தல் ஆணைக்குழுவினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

அதற்கமைய வேட்பு மனு கையேற்றல் 2017.12.11 ஆம் திகதி தொடக்கம் 2017.12.14 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை மேற்கொள்வதற்காக வேட்பு மனு அறிவித்தலை வெளியிடுவதற்கு மாவட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களான பிரதி/உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## முறைப்பாட்டாளர்கள் மேன் முறையீட்டு நீதிமன்ற மனுவை விலக்கிக் கொள்ளல்

இந்தவேட்பு மனு அறிவித்தல் வெளியிடப்பட்ட பின்னர் முன்னர் குறிப்பிட்ட மேன்முறையீட்டு நீதிமன்ற மனுவை கேட்டு விலக்கிக் கொள்வதற்கு முறைப்பாட்டாளர்கள் நடவடிக்கையெடுத்த காரணத்தால் எஞ்சிய 248 உள்ளூராட்சி அதிகார சபைகளுக்காகவும் 2017.12.18 ஆம் திகதி தொடக்கம் 2017.12.21 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை மேற்கொள்ளப்படுமென அறிவிக்கும் வேட்புமனு அறிவித்தலை 2017.12.04 ஆம் திகதி வெளியிடுவதற்கு முடிந்தது.

## வேட்பு மனுக்களும் தேர்தலும்

வேட்புமனு அறிவித்தல்களுக்கமைய முதலாம் கட்டத்தில் 519 வேட்பு மனுக்கள் கிடைக்கப்பெற்ற தோடு அவற்றில் 466 அரசியல் கட்சிகளும் 53 சுயேட்சைக் குழுக்களும் வேட்பு மனுக்களை கையளித்திருந்தன.அந்தவேட்பு மனுக்களில் 19 அரசியல் கட்சிகளின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதோடு 4 சுயேட்சைக் குழுக்களின் வேட்பு மனுக்களும் நிராகரிக்கப்பட்டன. அதற்கமைய 447 அரசியல் கட்சிகளின் வேட்புமனுக்களும் மற்றும் 49 சுயேட்சைக் குழுக்களின் வேட்பு மனுக்களும் அடங்கலாக 496 வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இரண்டாம் கட்டத்தில் 1399 அரசியல் கட்சிகளும் 183 சுயேட்சைக் குழுக்களும் வேட்புமனுக்களைகையளித்திருந்தன. அந்தவேட்புமனுக்களில் 20 அரசியல் கட்சிகளின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதோடு 9 சுயேட்சைக் குழுக்களின் வேட்புமனுக்களும் நிராகரிக்கப்பட்டன. அதற்கமைய இரண்டாம் கட்டத்திற்காக 1379 அரசியல் கட்சிகளின் வேட்புமனுக்களும் மற்றும் 174 சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக்களும் அடங்கலாக 1553 வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

(தொடரும்)

# அரச நிறுவனங்களில் விசேட சோதனை



(கொழும்பு)

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் அரச நிறுவனங்களை விசேட சோதனைக்கு உட்படுத்தும் வேலைத்திட்டத்தின் முதலாவது கட்டம் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது.


அரச நிறுவனங்களில் இடம்பெறும் தவறுகளை குறைத்து, பொதுமக்களுக்கு செயல்திறன் மிக்க சேவையை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இந்த வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தப் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் 28 அதிகாரிகள் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

# ஆலய வழிபாடு

## ஏன்-எதற்கு - எப்படி



### கடவுளை நெருங்க உதவும் மூச்சுப் பயிற்சி

கடவுளை நெருங்குவதற்கு 2 முக்கிய வழிகள் உள்ளன. ஒன்று - பக்தி மார்க்கத்தின் மூலம் கடவுளை உணர்ந்து புரிந்து நெருங்கலாம்.

இரண்டாவது - தியானம், யோகம் மூலம் கடவுளை அறிந்து அணுகலாம்.

இந்த இரு வழிகளுக்கும் நம் உடலில் மின் காந்த அலையை அதிகப்படுத்த வேண்டியது மிக மிக அவசியமாகும். இதற்கு மூச்சுப் பயிற்சி உதவுகிறது.

மூச்சுப் பயிற்சிக்கும் இறைவழிபாட்டுக்கும் காலம் காலமாக தொடர்புள்ளது. "மூச்சே தெய்வம் காற்றே கடவுள்" என்று அகத்தியர் கூறியுள்ளார்.

சங்க கால தமிழர்கள் ஆலயங்களில் வழிபாடு செய்ய செல்லும்போது மூச்சுக்கு முக்கியத்துவம் அளித்தனர். காலம் செல்ல செல்ல தமிழர்கள் இதை மறந்து விட்டனர்.

இப்படி நடக்கும் என்று தெரிந்து தானோ...என்னவோ ஆழ்வார்களும் நாயன்மார்களும் நம் மூதாதையர்களும் இறை வழிபாட்டுக்குரிய மூச்சுப் பயிற்சி பற்றி ஏராளமான குறிப்புகளை எழுதி வைத்துள்ளனர்.

சைவத்தைப் பரப்பிய 63 நாயன்மார்களில் ஒருவரான திருமூலர் தான் எழுதிய திருமந்திரத்தில் சைவ ஆகம விதிகளை எழுதியுள்ளார். அதில் மூச்சுப் பயிற்சி பற்றி நிறைய குறிப்பிட்டுள்ளார்.

மூச்சைக் கட்டுப்படுத்தி அடக்கி பிராணனை வசப்படுத்த யாரால் முடிகிறதோ அவரால் மட்டுமே இறையருளைப் பெற முடியும்.

இதைக் கருத்தில் கொண்டே மூச்சை உள் இழுக்கும் போது 16 மாத்திரை அளவுக்கும் மூச்சை உள் நிறுத்தும்போது 64 மாத்திரை அளவுக்கும் மூச்சை வெளியில் விடும் போது 32 மாத்திரை அளவுக்கும் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளனர்.

தன்னை அறியும் முயற்சியின் மூலச் சூத்திரம்தான் நாம் விடும் மூச்சு. மூச்சுக்குள் மூவாயிரம் ஆண்டுகள் வாழும் மூலாதார முடிச்சுக்கள் பொதிந்து உள்ளன. அந்த முடிச்சுக்களை மூச்சின் வழி தான் நாம் அவிழ்க்க வேண்டும்.

மூச்சைக் கவனித்தால் விழிப்புத் தானே வரத் தொடங்கும். தவம் என்ற முயற்சியை மூச்சின் வழியே தொடங்கிட வேண்டும். பயிற்சியும் முயற்சியும் பின்னர் இயல்பான பாதையாகி விடும்.

கால் பதித்த புல் தரைகள் காலப் போக்கில் ஒத்தையடிப் பாதையாக உருவெடுப்பது போல மூச்சுக் காற்றை ஒழுங்குபடுத்தினால் இறை வழிபாட்டுக்கான வாழ்வின் பாதை நமக்குள் வசப் பட்டு விடும்.

ஆலயங்களில் தெய்வீக அலைகள் நிரம்பி இருக்கும். அந்த அலைகளை நாம் எந்த அளவுக்கு உறிஞ்ச முடியுமோ அந்த அளவுக்கு உறிஞ்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படி உறிஞ்சும் போது நம் உள்ளம், உடல் இரண்டுக்கும் தேவையான சக்தி கிடைக்கும்.

இதைக் கருத்தில் கொண்டே நம் முன்னோர்கள் தினமும் ஆலயத்துக்குச் செல்ல வேண்டும் என்று வலியுறுத்தினார்கள்.

குறிப்பாக கருவறை அருகில் செல்லும்போது நன்கு ஆழ்ந்த சுவாசம் செய்ய வேண்டும். "கருவறை சுவாசமே பிரதானம்" என்பதை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.(தொடரும்)

# செய்தித்துளிகள்

## சிவனொளிபாத மலையில் சிரமதானம்

(ஹற்றன்)

வரலாற்று சிறப்புமிக்க சிவனொளிபாத மலைப் பகுதியை குப்பை இல்லாத பகுதியாக மாற்றுவதற்கான வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நான்காவது தடவையாக முன்னெடுக்கப்படும் இவ் உன்னத வேலைத்திட்டத்துடன் இம்முறை இலங்கை விமானப் படை கைகோர்த்திருக்கின்றது. (நி)

## வீதி விபத்துகளில் சிக்கி 12 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் நேற்று முன்தினம் மாத்திரம் வீதி விபத்துக்களில் சிக்கி 12 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தற்சமயம் வீதி விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையினால், வாகன சாரதிகள் போக்குவரத்து சட்டங்களை அவசியம் கடைப்பிடித்து வாகனங்களை செலுத்துமாறும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வலியுறுத்தினார். (நி)

## இதுவரை 45 சடலங்கள் கிழக்கில் அடக்கம்

(கொழும்பு)

நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் வைக்கப்பட்டிருந்த 45 கொரோனா சடலங்கள் இதுவரையில் அடக்கம் செய்யப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இன்னும் ஓரிரண்டு சடலங்கள் உள்ளதாகவும் அவை விரைவில் அடக்கம் செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில், ஓட்டமாவடி பிரதேசத்தில் அடக்கம் செய்யும் பணிகள் இடம் பெற்று வருவதாக இராணுவத் தளபதி மேலும் தெரிவித்தார். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 140 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 220 | 250 |
| தக்காளி | 140 | 120 | 120 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 70 | 50 |
| கோவா | 140 | 120 | 120 | 150 |
| கரட் | 160 | 200 | 200 | 240 |
| பூசணி | 70 | 80 | 80 | 100 |
| புடோல் | 120 | 120 | 120 | 120 |
| வாழைக்காய் | 50 | 70 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 160 | 150 | 140 | 200 |
| பெரிய வெங்காயம் | 150 | 90 | 100 | 120 |
| பாகற்காய் | 160 | 400 | 280 | 280 |
| வெண்டிக்காய் | 140 | 160 | 180 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 220 | 250 | 200 | 250 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 | 140 |
| பீற்றூட் | 80 | 70 | 100 | 100 |
| கறிமிளகாய் | 200 | 200 | 240 | 240 |
| முருங்கைக்காய் | 800 | 400 | 800 | 800 |
| போஞ்சி | 150 | 140 | 140 | 250 |
| கத்தரிதம்புள்ள | 140 | 80 | 120 | 160 |
| கீரை - 1 பிடி | 40 | 35 | 40 | 50 |
| தேசிக்காய் | 150 | 140 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 85 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 240 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 140 | 100 | 120 | 120 |
| முள்ளங்கி | 50 | 40 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 50 | 40 |
| வல்லாரை | 40 | 100 | 20 | 30 |
| ஈரப்பலா | 150 | 130 | 80 | 120 |

# சபையில் நியமனத்திற்காக பலர் காத்திருக்கையில் ஒரு இலட்சம் வேலைவாய்ப்பினருக்கு பயிற்சியளிக்க முடியாது



## வலி.கிழக்கு தவிசாளர் நிரோஷ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**வலி.கிழக்கு பிரதேச சபையில் நிரந்தர நியமனத்திற்காக பலர் காத்திருக்கையில் ஒரு இலட்சம் வேலைவாய்ப்பின் கீழான பயிற்சியாளர்க்கு பிரதேச சபையில் பயிற்சியளிக்க முடியாது என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார்.**

ஒரு இலட்சம் வேலை வாய்ப்பின் கீழ் பயிற்சி பெறுவோருக்கான உள்ளகப் பயிற்சியை பிரதேச சபையில் பெற்றுக கொடுக்கும் நோக்கில் இராணுவத்தின் பல்நோக்கு அபிவிருத்தி படைப்பிரிவு மற்றும் தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபை அதிகாரிகள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷை கடந்த வெள்ளிக்கிழமை சபையில் சந்தித்து கலந்துரையாடினர்.

அவர்கள் தமது திட்டத்தின் கீழ் பயிற்சி பெறுவோர் ஏற்கனவே சுகாதாரத் திணைக்களத்தில் பயிற்சி பெற்றதாகவும் தற்போது அவர்களுக்கான தொடர் பயிற்சியினை உள்ளூராட்சி மன்றத்தில் தொடர்வதற்கு ஏற்பாடு செய்ய ஆவண செய்யுமாறு கேட்டுக் கொண்டனர்.

இந் நிலையில் தவிசாளர் நிரோஷ், தமது சபையில் ஏற்கனவே பலர் வெளிவாரியாக பணியாற்றி வருகினறனர். அவர்களில் பலர் நிரந்தர நியமனத்திற்காக நேர்முகத்தேர்வுகளில் தோற்றி அவ் விபரங்கள் அரசதுறை நிறுவனங்களுக்காக அனுமதிக்கப்பட்ட பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச்செய்தல் விதிமுறைக்கு அமைய, முகாமைத்துவ சேவை திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனினும் துரதிஸ்டவசமாக அரசாங்கத்தினால் நியமனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதனால் வருடக் கணக்கில் சபைகளில் தொண்டாற்றிய பலர் நியமனம் இன்றித் தவிக்கின்றனர். அவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படாதிருக்க உள்ளூராட்சி மன்றங்களில் பயிற்சிக்காக புதிய வர்கள் வருவது பொருத்தமற்றது.

ஒரு இலட்சம் வேலை வாய்ப்பில் பயிற்சிக்கு வருபவர்கள் இங்கு நியமனத்தினைக் கோர சட்ட ரீதியான உரித்தற்றவர்களாகக் காணப்படினும் அரச கொள்கையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டால் தேவையற்ற சிக்கல்கள் ஏற்படும். ஏற்கனவே பணியில் உள்ளவர்கள் பாதிப்படைவர்.

எனவே பயிற்சி ஆயினும் புதியவர்களை உள்ளீர்ப்பது எமது தொழிலாளர்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தும். ஒரு இலட்சம் வேலை வாய்ப்பில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்கள் தொழிற்றுறைத் தொழிலாளர்கள், எமது சபைகளில் சுகாதார மற்றும் வெளிக்களத் தொழிலுக்கான தேவைகளே உள்ளன. அதற்கு எம்மிடம் ஏற்கனவே பணியாற்றிய தொழிலாளர்களே தகுதியான வர்கள். எனவே நாம் ஏற்கனவே உள்ள தொழிலாளர்களை நியமிக்க பலதரப்பட்ட வகையில் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

இந் நிலையில் புதியவர்களுக்கு சிற்றூழியர் விடயத்தில் தொழிற்பயிற்சியை எமது சபை வழங்க முடியாது என தியாகராஜா நிரோஷ் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். (5-6)

# உலர் உணவு கிடைக்காவிடின் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளவும்

(மன்னார்)

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் கொவிட்-19 தொற்று காரணமாக சுய தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவு வழங்கும் திட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொவிட்-19 தனிமைப்படுத்தலில் உள்ள குடும்பங்களுக்கு உலர் உணவு வழங்கும் திட்டம் மன்னார் பிரதேச செயலகத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் வீடுகளில் சுய தனிமைப்படுத்தப்படுபவர்களின் தேவைகள் தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்டு உரிய கிராம உத்தியோகத்தர்களினால் அவர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் விநியோகிக்கப்படுகின்றன.

இந்த வருடத்தில் இதுவரை 210 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தற்போது சுய தனிமைப்படுத்தலில் உள்ளவர்களுக்கு உலர் உணவு பொருட்கள் கிடைக்காது இருப்பின் கிராம உத்தியோகத்தர்களுடன் தொலை பேசி மூலம்தொடர்பு கொள்ளவும்.

மேலதிக தொடர்புகள் மற்றும் முறைப்பாடுகள் இருப்பின் 023-222 2238 என்ற தொலைபேசி இலக்கம் ஊடக மன்னார் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (5-6-285)

# தென்னம் மட்டையிலிருந்து இயற்கை உரம் தயாரிப்பு



(தருமபுரம்)

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் பகுதியில் வசிக்கும் ஒருவர் நாளாந்தம் பயன்படுத்தும் தேங்காய்மட்டையினை கொள்வனவு செய்து அதனை இயந்திரமூலம் நன்றாக அரைத்து பின்னர் காயவைத்து இயற்கை உரம் தயாரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார். (5-6-316)



(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள இளைஞர் யுவதிகளுக்கான ஊடக பயிற்சியை வழங்கும் முகமாக மன்னார் கலையருவி நிறுவனத்தின் ஏற்பாட்டில் மூன்று மாத கால ஊடக பயிற்சி வகுப்புக்கள் நடைபெறவுள் ளன. இதன் ஆரம்ப நிகழ்வு கலையருவி இயக்குனரும் மற்றும் 'மன்னா' பத்திரிகை ஆசிரியருமான அருட் பணி. அ.லக்ஸ்ரன் டி சில்வா தலைமையில் நேற்று முன்தினம் நடை பெற்றது.

ஊடக துறை சார்ந்த அடிப்படை பயிற்சிகளை கொண்ட குறித்த குறுங் கால கற்கை நெறியானது மூன்று மாத காலஎல் லையை கொண்டதுடன் பயிற்சியின் பின்னர் பெறுமதி வாய்ந்த சான்றிதழ் வழங்கப்பட்டு சிறப்பான முறையில் தகுதி பெறுகின்ற மாணவர்களுக்கு ஊடக துறை டிப்ளோமா தர வகுப்புக்களுக்கான வாய்ப்பும் வழங்கப்படவுள்ளது. (5-6-285)



சுன்னாகம் சிவன் கழகமும், சுன்னாகம் கதிரமலைச் சிவன் தொண்டர்களும் இணைந்து தெல்லிப்பழைஆதார வைத்திய சாலையின் இரத்தவங்கிப் பிரிவின்அனுசரணையில் தமது நான்கு நண்பர்களின் நினைவாக ஏற்பாடு செய்த இரத்ததான முகாம் நேற்று ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் கதிரமலைச் சிவன் ஆலய மணி மண்டபத்தில் நடைபெற்றது. (படம் -ரவிசாந்)

# கும்பாபிஷேக தின சங்காபிஷேகம்

(குப்பிழான்)

வட்டுக்கோட்டை கண்ணகி அம்மன் ஆலய கும்பாபிஷேக தின சங்காபிஷேகம் நாளை 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30மணியளவில் ஆரம்பமாகும்.

விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து கண்ணகி அம்மன் வீதி உலா வரதலும் இடம் பெறும் என ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (5-6-18)

# நிர்வாகத் தெரிவு

(நெளுக்குளம்)

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க நிர்வாகத்தெரிவு அதிபர் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதில் தலைவராக ரி.தயாபரனும் செயலாளராக ரி.கோபிநாத்தும் பொருளாளராக லிங்காதரன் உப செயலாளராக இ. சற்சொருபனும் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் நிர்வாகசபை உறுப்பினர்களாக ந.கபிலநாத், சூஜன் என் டன்சன், எம்.ஜீவகுமார், சபேசன், ரி.யசோதரன், ரி.ராஜ்குமார், எஸ்.புவீந்திரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (5-6-299)

காலம் அனைத்தையும் வென்றுவிடும். எனவே நேரத்துக்குப் பணிந்து ஒன்றுபட்டு பணியுரியுங்கள்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வெளிநாட்டுத் தூதுவர்களுடன் ஒன்றுபட்டுச் சந்தியுங்கள்

தமிழினம் பற்றி ஆராய்ந்த டாக்டர் மு.வரதராசனார் தமிழினத்தின் வீழ்ச்சிக்கு ஒற்றுமையின்மையே காரணமாக இருந்துள்ளது எனக் கண்டறிந்தார்.

அதில் உண்மை உண்டென்பதை நாம் ஏற்றுத்தானாக வேண்டும்.

ஆம், தமிழர்களிடம் இயல்பாகவே ஒற்றுமையின்மை இருந்துள்ளது என்பதற்குப் பல உதாரணங்களை எடுத்துக் காட்ட முடியும்.

அதிலும் நம் ஊர்களில் உள்ள வேற்றுமைகள் எங்களின் உயர்ச்சியை மட்டம்தட்டிக் கொண்டே இருக்கின்றது.

இந்நிலைமை ஊர்களோடு, பிரதேசங்களோடு நின்றுவிடவில்லை.

மாறாக எங்கள் தமிழர் அரசியலில் இருக்கக்கூடிய ஒற்றுமையீனங்கள் எங்கள் தமிழினத்தின் உயர்ச்சிக்குப் பாதகமாக அமைந்துவிடுகிறது.

உலக நாடுகளில் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் வீறுகொண்டெழுந்து தங்களின் உரிமையை வென்றெடுப்பதற்குப் பின்னால், ஒற்றுமை என்ற விடயம் அங்கு பலமாக இருந்துள்ளது என்பதை இங்கு நாம் சுட்டிக் காட்டியாக வேண்டும்.

கறுப்பின மக்களுக்காகப் போராடிய நெல்சன் மண்டேலா, பலஸ்தீன மக்களின் வாழ்வுக்காகத் தன்னை அர்ப்பணித்த யசீர் அரபாத் போன்ற தலைவர்கள் தனித்துவமான தலைமைத்துவத்துடன் தங்களின் பிரச்சினைகளை உலக நாடுகளின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர்.

அதனால் அவர்களால் இலக்கை அடைய முடிந்தது. ஆனால் எங்களிடம் அப்படி ஏதும் இல்லை.

உதாரணமாக, யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இந்தியத் தூதுவர்; இரா.சம்பந்தர் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை, நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளை தனித்தனியாகச் சந்தித்தார்.

இச்சந்திப்பு தமிழ் மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிவதற்கானதாக இருந்தது.

ஆனாலும் மூன்று தரப்பையும் தனித்தனியாகச் சந்திக்க வேண்டிய சூழ்நிலைக்குக் காரணம் என்னவெனில்,

எங்களிடம் உள்ள ஒற்றுமை இன்மை என்பதுதான்.

உண்மையில் மேற்குறித்த மூன்று கட்சிகளும் ஒன்றாகச் சென்று இந்தியத் தூதுவரைச் சந்தித்திருந்தால், தமிழர்கள் ஒற்றுமையாக இருக்கிறார்கள் என்ற கருத்துருவாக்கம் ஏற்பட்டிருக்கும்.

ஆனால் எங்களிடம் ஓர் இணக்கப்பாடு இல்லை என்பதை நிரூபிப்பதாக எங்கள் அரசியல் தரப்புகள் தனித்தனியாக இந்தியத் தூதுவரைச் சந்தித்துள்ளன.

தவிர, இவர்கள் இந்தியத் தூதுவரிடம் வேறுபட்ட தகவல்களை முன்வைத்திருப்பர் என்பதையும் ஊகிக்க முடியும்.

ஆக, வெளிநாட்டுத் தலைவர்கள், வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்திக்கின்ற போதாவது நம்மவர்கள் ஒற்றுமைப்பட்டு ஒன்றாகச் செல்ல வேண்டும்.

இல்லையேல் முதலில் நீங்கள் ஒற்றுமைப்படுங்கள் என கூறுகின்ற கட்டம் வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு ஏற்படவே செய்யும்.

### மக்கள் சேவை எனக் கூறிக்கொண்டு

# சுயநல அபிவிருத்தியே குறிகோளாக இருப்பவர்களின் சித்தாந்தம் தூய்மையற்றது

### நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**மக்கள் சேவை எனக் கூறி சுயநல அபிவிருத்தியே குறிக்கோளாக இருப்பவர்களின் சித்தாந்தம் தூய்மையற்றது என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

வாரம் ஒரு கேள்வி பதிலில், ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"உங்கள் கட்சிப் பதிவு பெற்றதாகப் பத்திரிகையில் செய்தி படித்தேன். உங்கள் கட்சி மற்றக் கட்சிகளில் இருந்து எவ்வாறு வேறுபடுகிறது?" என ஊடகவியலாளர் கேள்வியெழுப்பியிருந்தார்.

இதற்குப்பதிலளித்துள்ள சி.வி.விக்னேஸ் வரன் , "எமது கட்சி இன்னமும் பதிவு பெறவில்லை. பதிவு பெறக்கூடும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

எமது தமிழ் மக்கள் கூட்டணியில் நாங்கள் எவருமே பாரிய புத்திசாலிகள், கெட்டிக்காரர்கள், திறமைசாலிகள் என்று பெயர் எடுத்தவர்கள் அல்லர். நாங்கள் மிகச் சாதாரணமானவர்கள். அரசியலுக்குப் புதியவர்கள்.

எங்களுக்கிருக்கும் ஒரேயொரு பொதுக் குணாதிசயம், நாங்கள் எங்கள் மக்கள் மீது அன்பு கொண்டிருக்கின்றோம் என்பதாகும். அந்த அன்புதான் எங்கள் பலம். ஒரு மானிடரின் வாழ்வைப் பரிசீலித்துப் பார்த்தீர்களானால் அவரின் சிந்தனையில் இருந்து சித்தாந்தம் வரையிலான அவரின் வாழ்வுமுறையே வாழ்க்கை என்று குறிப்பிடப்படுகின்றது.

சிந்தனையில் இருந்து பிறப்பது சொல். சொல்லில் இருந்து பிறப்பது செயல். ஒருவரின் சிந்தனை, சொல்மற்றும்செயல்களின் வாயிலாக அவர் பிரதிபலிப்பதுதான் அவரின் சித்தாந்தம். இதிலே வழி நெடுகலும் தூய்மை வேண்டும். சிந்தனையில் தூய்மை, சொல்லில் தூய்மை, செயலில்தூய்மை என வாழ்ந்தால் எமது சித்தாந்தமும் தூய்மை பெறும். அதை விட்டு அசிங்கமான சிந்தனைகளோ, சொற்களோ அல்லது செயல்களோ எம்மைப் பீடித்துக் கொண்டால் எமது வாழ்க்கை கேள்விக் குறியாகி விடும்.

அரசியல் என்பது குறிக்கோள்களைக் கொண்டது. ஆகவே, சித்தாந்தத்தை மையமாக வைத்தே அரசியல் நடை பெறுகின்றது. நடைபெறவேண்டும். எமது கட்சி யின் சித்தாந்தம் என்ன என்று கேட்டால் மக்கள்சேவையாகும். எல்லோரும் மக்கள் சேவை செய்கின்றோம் என்று தானே கூறுகின்றார்கள் என்று கேள்வி கேட்பீர்கள். இங்குதான் தூய்மை என்பது அவசியம். மக்கள் சேவை எனக்கூறி சுயநல அபிவிருத்தியே குறிக்கோளாக இருப்பவர்களின சித்தாந்தம் தூய்மையற்றது.

நோக்கிச் சென்றால் அவர்கள் செயலில் தூய்மை இருக்காது. சொல்லில் தூய்மை இருக்காது. சிந்தனையில் தூய்மை இருக்காது. சுயநலமே எல்லாவற்றையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் என்றார். (ஞா)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** வளலாய், பலாலி வடக்கு பல நோக்கு கூட்டுறவுச்சங்கம், தொண்டைமானாறு வல்வெட்டித்துறை வீதி ஆகிய இடங்களிலும்,

**கிளிநொச்சி பிரதேசத்தில்** பரந்தனிலிருந்து பூநகரி ஊடாக கௌதாரிமுனை வரை, முக்கொம்பனிலிருந்து அரசபுரம் வரை, நெற்பிலவு, பள்ளிக்குடா, செம்மண்குன்று, ஞானிமடம், கறுக்காய் தீவு, 5V படைப்பிரிவு, பிரதேச செயலகம் பூநகரி, 66ஆவது படைப்பிரிவு பூநகரி, 66ஆவது படைப்பிரிவு 2 பூநகரி, பெரியமடு கிராமம் ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில்** இராஜேந்திரகுளத்திலிருந்து உளுக்குளம் வரை, குடாகச்சக்கொடிய கிராமம், கூமாங்குளம் கிராமம், அறவந்துலாவ (பாவற்குளம் கிராமம்), தரணிகுளம், சமணன்குளம் கிராமம் ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** மாலுவாடி, கொன்னையன் குடியிருப்பு, ஓலைத்தொடுவாய், New Silk Road, Aquatic Company Pvt Ltd, எருக்கலம்பிட்டி நீர்ப்பாசன திட்டம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## நடிப்புச் சினம்



தேலையில்லாத ஆசை என்றால் அமைதியாகச் சிந்திப்பது நல்லது. "இந்த ஆசை எழுந்ததே தவறு இதை நிறைவு செய்தால் பல துன்பங்கள் வருமே எனவே இந்த ஆசையை நான் விட்டு விடுவேன்" என்று தெளிவாக எண்ணி, தவம் இயற்றிச் சங்கற்பம் மேற்கொள்ள வேண்டும். பின்னொருகால் இந்த ஆசை மனதில் தோன்றினாலும், முன்பே எடுத்து வைத்திருக்கும் முடிவும் கூடவே வந்து, அந்த ஆசையானது காலப் போக்கில் மறையும்.

அதே போல் தேவை என்று கண்டவிடத்தும், நிறைவு செய்ய வசதி இல்லை என்றாலும் முன் சொன்னது போலவே ஆராய்ச்சியும் சங்கற்பமும் கூட பின் விளைவு தீங்கு தருவதென்றால், அந்த ஆசையையும் முன் சொன்ன அதே முறையில் சமம் செய்து கொள்ள வேண்டியது தான். நிறைவும் செய்யாமல் மாற்றவும் செய்யாமல் ஆசைகளை மனதில் சுமந்து கொண்டிருந்தால் மன அமைதி கெடும். உடலில் குன்மம் முதலிய நோய்கள் உண்டாகும்.

ஒரு ஆசையை இம்மாதிரி மனதில் வைத்திருக்கும் காலத்தில் எடுத்த காரியங்களிலெல்லாம் செயல் வேகம் குன்றி, திறமை மழுங்கி, தோல்வி ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். ஆசை, திட்டமிடல், செயல் (desire, approach, achievement) மூன்றும் சரியாக இருந்தால் வெற்றி மேல் வெற்றி வந்து கொண்டேயிருக்கும்.

# அம்பாள் குளத்தில் பெண் சடலமாக மீட்பு

## இறப்பின் மர்மம் துலங்குமா?

மாலை இருள் மங்கும் வேளை, மங்கையவள் வாழ்வில் விதி விளையாடியது. மார்ச் மாதம் எட்டாம் நாள் சர்வதேச பெண்கள் தினம். அம்பாள் குளத்தில் பெண்ணின் சடலம் தலையில் அடித்துக் கொலை செய்யப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது.

அப் பெண்ணுக்கு மூன்று வயதில் ஒரு பெண் குழந்தை, தாய் போன இடம் அறியாது, தாய்க்கு என்ன நடந்தது எனத் தெரியாது, தாய் இறந்திட்டார் என்பதே அறியாது அந்தப் பாலகி முற்றத்தில் மண் அள்ளி விளையாடிக் கொண்டிருந்தாள்.

மீண்டும் அவள் கருவில் ஒரு குழந்தை. அது ஆணா? பெண்ணா தெரியவில்லை. கர்ப்பிணிப் பெண்ணைத் தலையில் அடித்துக் கதறக் கதறக் குளத்தில் வீசியுள்ளார்கள்.

இதன் சூத்திரதாரி யார்? அலை மோதும் துன்ப வாழ்வில் சிக்கித் தவிக்கும் பெண் குழந்தையின் நிலையென்ன?

**யார் இந்தத் திலகேஸ்வரி**

கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்டு புடைவைக் கடை ஒன்றில் எட்டு வருடங்களாக வேலை பார்த்தவள் திருமணம் ஆகாத நிலையில் ஆண் ஒருவரினால் ஏமாற்றப்பட்டு ஒரு குழந்தையை 2018 இல் பெற்றெடுத்தவள். அக் குழந்தைக்கு இப்போது மூன்று வயது. மீண்டும் ஓர் ஆண் மகனினால் ஏமாற்றப்பட்டு அவள் வயிற்றில் ஒரு குழந்தை. மூத்த மகளுக்கு பிறப்புச் சான்றிதழ் பெற பல அரச திணைக்களங்களை நாடியுள்ளார். ஆனாலும் பயன் ஏதும் கிடைக்கவில்லை.

முப்பத்தேழு வயதுடைய திலகேஸ்வரிக்கு பெற்றோர்கள், சகோதரர்கள், உறவினர்கள் என்று யாரும் இல்லையென்று சொல்லப்படுகின்றது. வாழ்க்கையின் விரக்தியிலும், பொருளாதாரக் கஷ்டத்திலும் பாதுகாப்பற்ற நிலையிலும் கொழும்பும் கிளிநொச்சியும் என்று வாழ்ந்து வந்தார்.

**கொழும்பில் இருந்த ஜெ. இந்திரராணியின் இல்லத்திற்கு எப்படிச் சென்றாள்?**

நாங்கள் கொழும்பில் இருக்கும் போது, வாடகைக்கு வீடு கேட்டு வந்தாள். எனக்கு இந்தப் பெண் யாரு? எங்கிருந்து வந்திருக்கா? என்று எதுவும் தெரியாது. நானும் பாவத்தில் இரங்கி இருக்கச் சொன்னன். மாதம் ஐயாயிரம் ரூபா வாடகையும் தரவில்லை கேட்டாலும் தர மாட்டாள்.

இங்கு இருக்க வேண்டாம் என்றாலும் போகின்றாள் இல்லை. அப்



போது கர்ப்பிணியாக இருக்கின்றாள். ஒரு புடைவைக் கடையில் வேலை பார்த்துக் கொண்டிருந்தவள். ஒரு நாள் பிந்தி வேலைக்குப் போட்டாள் என்பதற்காக அந்தக் கடையில் இருந்து வேலையால் நிப்பாட்டிப் போட்டார்கள். அன்றிலிருந்து ஆளுக்குச் சரியான கஷ்டம். அவர்கள் சம்பளம் கொடுக்கவில்லையாம் , ஊழியர் சேமலாப நிதியும் தரவில்லையென்று இந்தக் கடை முதலாளிக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தார். அவ் வழக்கு இப்போதும் நடைபெறுகின்றது என்று அவள் வாடகைக்கு வாழ்ந்து வந்த வீட்டின் உரிமையாளர் ஜெயக்காந்து இந்திரராணி குறிப்பிடுகின்றார்.

**கிளிநொச்சிக்கு ஏன் வந்தார்?**

திலகேஸ்வரி ஒழுங்காக வாடகை செலுத்துவதில்லை. அப்பொழுது தான் வீட்டை வேறொரு ஆட்களுக்கு வாடகைக்குக் கொடுத்துட்டன். நான் சொன்னன் கிளிநொச்சியில் எங்கள் வீடு சும்மாதானே இருக்கு. அங்கு போய் இரு. அங்க போனால் குழந்தை பெத்தையும் வடிவாகப் பார்க்கலாம் என்று சொல்ல கிளிநொச்சி வீட்டில் எனது கணவர் இருந்தவர். அவருக்கு இவள் போன் செய்து நான் உங்க வரட்டா என்று கேட்க கணவரும் தனக்கு இவளால் உதவிதானே என்று வாவென்று சொல்லி எங்கட தற்காலிகமாகக் கொட்டகையில் இருந்தாள். இதற்காகத் தான் வந்தார் என்பதை ஜெ. இந்திராணி கூறினார்.

**கொலை நடக்கும் நாளன்று அவளது நிலை?**

கிளிநொச்சி, உருத்திரபுரம் கிழக்கு , 8 ஆம் வாய்க்காலில் வசித்து வந்த ஆறுமுகம் திலகேஸ்வரியின் வீட்டு உரிமையாளர் தம்பி ஐயா ஜெயக்காந்து என்ன நடந்தது என்கின்றார்.

எனக்கு ஒரு கால் இல்லை, எனக்கு இரண்டு ஆண் பிள்ளைகள். நான் ஆட்டோ வைத்திருக்கின்றேன். அன்று மாலை ஐந்து மணியளவில் கொஸ்பிற்றலிற்கு ஒருக்கா கூட்டிக் கொண்டு போங்கோ என்றாள். நான் அங்க நேர்ஸ்ச சந்திக்க வேண்டும் என்றாள். நானும் கூட்டிற்று போனன். என்னை டிப்போ சந்தியில் இறக்கி விடுங்கள் என்றாள். நான் ஏனடி இதில இறக்கிறது, உனக்கு அலுவல்கள் அங்க தானே ஏன் இங்க இல்லை இதில் இறக்குங்கள் என்றா. நானும் அந்த இடத்தில் இறக்கிட்டன். இரண்டு மணித்தியாலயத்திற்குப் பின்னர் போன் எடுத்து நேர்ஸ் இன்னும் வரல, அவாவ சந்தித்திட்டு வரவா என்றாள்.நான் ஏன் இந்த இரவு நேரத்தில் என்று சொல்ல,. நான் நேர்ஸ்ச சந்தித்து விட்டு வாறன் என்றா.

அப்படியே அந்த நேரம் மின்சாரம் துண்டிக்கப்பட்டு விட்டது. பிறகு நாங்கள் போன் எடுக்க போன் வேலை செய்யவில்லை. நாங்கள் நினைத்தோம் கொழும்புக்குப் போட்டாள் என்று. மறுநாள் காலை பத்துமணி இருக்கும் விதானையார் கோல் செய்து சொன்னார். அம்பாள் குளத்தில் இப்படிச் சடலம் இருக்குது அடையாளம் காட்டச் சொல்லி. நான் போய் இது திலகேஸ்வரியின் சடலம் தான் என அடையாளம் காட்டினேன்.

வீட்டை விட்டு புறப்படும்போது போட்டிருந்த உடையுடன்தான் சடலமாக இருந்தார். மண்டையில் பலத்த காயங்கள் இருந்தது என்றார்.

**சமூக மட்ட அமைப்புக்களின் பொறுப்பென்ன?**

ஒரு கிராமத்திற்கு ஒரு நபர் புதிதாக வந்து ஒரு குடும்பத்தோடு குடியிருக்கும் போது அந்நபர் தொடர்பான பின்னணிகளை இடமளிக்கும் வீட்டார் முதலில் அறிந்திருக்க வேண்டும். அதன் பின்னர் இருவருக்கும் நம்பிக்கை ஏற்படும் பட்சத்தில் மாத்திரமே தொடர்ந்து அவ் வீட்டில் குடியிருக்க அனுமதிக்க வேண்டும். அதிலும் பெண்ணாக இருந்தால் மிகவும் கவனத்துடன் பொறுப்பெடுக்க வேண்டும்.

இந்தப் பிள்ளையை எமது வீட்டில் வைத்திருந்தால் பிள்ளைக்குப் பாதுகாப்பு உத்தரவாதப்படுத்தப்படுமா?, பிள்ளை மீதான சமூகத்தின் பார்வை எப்படியிருக்கும்? கணவன் இல்லாத பிள்ளைக்கு இடங்கொடுத் தால் நாங்களும் சிக்கலில் மாட்டி விடுவோமோ? என்று சிந்திக்க வேண்டும்.

பிறிதொரு கிராமத்திலிருந்து ஒருவர் குறித்த கிராமத்திற்கு வந்து குடியிருக்கும் போது அக் கிராமத்தின் கிராம அபிவிருத்திச் சங்கம், கிராம மாதர் சங்கம் யார், எவர், என்று அறிய வேண்டும். குறித்த நபரை இங்கு தங்க விடுவதால் ஏதாவது பிரச்சினைகள் ஏற்படுமா? என்று கலந்தாலோசிக்க வேண்டும். தாம் அறிந்த விடயங்களை கிராம உத்தியோகத்தருக்கு அறிவிக்கக் கடமைப்பட்டவர்கள்.

**ஆஸ்துமாவால் அவதிப்பட்ட திலகேஸ்வரி**

கொலை செய்யப்படுவதற்கு 15 நாட்களுக்கு முன் இரவு 11 மணிக்குத் திடீரென ஆஸ்துமா ஏற்பட்டு மூச்செடுக்கச் சிரமமான நிலையில் பத்தாம் வாய்க்கால் வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வந்தது.

ஐந்து நாட்களுக்கு மேல் வைத்தியசாலையில் இருந்தவள் என்று ஆதங்கப்பட்டார் இ. இந்திரராணி

**அபிஸ்சிக்காவை யார் பொறுப்பெடுக்கப் போகின் றார்கள்?**

தாய், தந்தை இருவரையும் இழந்து அநாதையாக நிற்கும் மூன்று வயதுப் பிள்ளை அபிஸ்சிக்காவை யார் பொறுப்பெடுக்க போகின்றார்கள். இந்தப் பிள்ளைக்கான பிறப்புச் சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கு யார் உதவப் போகின்றார்கள். பிள்ளையின் நிகழ்கால, எதிர்கால வாழ்விற்கு யார் ஆதரவாக இருக்கப் போகின்றார்கள்? சிறுவர் இல்லங்கள் ஊடாகப் பிள்ளையைப் பொறுப்பெடுத்து தகுந்த பாதுகாப்பும் கல்வியும் அடிப்படைத் தேவைகளும் பூர்த்தியாக்கப்பட வேண்டும். தாயின் நிலைமை பிள்ளைகளையும் தொடராமல் இருக்க இப்போதே சரியான அடித்தளத்தை இடுவோம். இதனை சம்பந்தப்பட்டவர்கள் காலம் தாழ்த்தாது மேற்கொள்ள வேண்டும்.

முதலாவது குழந்தையை வயிற்றில் சுமக்கும் போது அவளுக்கென்று ஓர் உறுதியான ஆண் துணை இருக்கவில்லை. இரண்டாவது குழந்தையை வயிற்றில் சுமந்த போதும் இந்நிலை தான் அவளுக்கு. ஒரு கர்ப்பிணிப் பெண்ணை தலையில் அடித்துக் கொன்று, குளத்தில் வீசியெறிகின்ற துன்ப நிலைக்கு யார் காரணம்.

ஒரு பெண்ணைப் பின் தொடருகின்ற ஆணின் நடமாட்டம் சந்தேகத்திற்கு இடமானால் அதனை உரிய இடங்களுக்கோ அல்லது அவ்விடத்தில் நிற்பவர்களிடமோ உதவி கோர வேண்டும். சமூக ஆர்வலர்கள் அனைவரும் விழித்தெழுந்து இனியொரு விதிசெய்வோம் என எழ-வேண்டும். குரல்கள் மௌனித்துப் போனால் மரணம் தான் மலிந்து போகும். இது தொடர்கதையா? இல்லை முடிவுறும் கதையா? பொறுத்திருந்து பார்ப்போம்.

**ஜெயம் ஜெகன்**

## ஒரே குடும்பத்தை...

குறித்த வீதியூடாக மோட்டார் சைக்கிளில் மன்னார் நோக்கி பயணித்துக் கொண்டிருந்தபோது வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியோரத்தில் நின்ற பனை மரத்துடன் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது.

இதன்போது சம்பவ இடத்திலேயே ஒருவர் உயிரிழந்துள்ளதோடு, மேலும் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். எனினும் குறித்த நபரும் உயிரிழந்துள்ளதாக தெரிய வருகின்றது.

செட்டிகுளத்திற்கு மரண சடங்கொன்றிற்கு சென்று விட்டு மீண்டும் மன்னார் நோக்கி வீடு திரும்பியபோதே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிய வருகின்றது.

குறித்த இருவரும் மன்னாரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகளை திருமணம் செய்த 36 மற்றும் 38 வயது குடும்பஸ்தர்களே குறித்த விபத்தில் பலியாகியுள்ளனர். (ஞா-285)

## ட்ரக்டர் தடம்...

இந்தச் சம்பவம் மடு இரண்டாம் கட்டையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் மடுவைச் சேர்ந்த ஜி.தமிழரசன் (வயது-20) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

மணல் ஏற்றிய உழவு இயந்திரம் சேற்றுக்குள் புதையுண்டு தடம்புரண்டதில் சாரதியான இளைஞன் அதற்குள் அகப்பட்டு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஞா-285)

## எதிர்வரும் புதன்...

ணையை எதிர்வரும் ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்ற வேண்டுமென்றும் சர்வதேச நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்து எதிர்வரும் புதன்கிழமை அழைப்பு விடுக்கப்பட்டுள்ள பேரணிக்கு ஒன்றிணைந்து ஆதரவளிப்போம் என தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எம் தமிழினத்தின், தமிழர் தேசத்தின் விடுதலைக்காகவும் விடிவுக்காகவும் தமிழினத்தின் எதிர்காலச் சந்ததி, இளைய சமுதாயத்தின் அர்ப்பணிப்புமிக்க செயற்பாடுகளுக்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டு ஆதரவு வழங்குவோம் என்றார். (ஞா)

## ஐ.நாவில் வெளி...

வெளியுறவு அமைச்சர் தினேஷ் குணவர்தன கூறியுள்ளார்.

இதற்கு பிரித்தானியா வழிநடத்தியிருப்பது ஒரு நட்பற்ற செயல் என்றும் குறிப்பிட்டார்.

கொமன்வெல்த் உறுப்பு நாடான இலங்கை மீது இங்கிலாந்து மேற்கொண்ட நட்பற்ற செயலாகும் என்றும் ஊடகம் ஒன்றுக்கு கூறியுள்ளார். (ஞா)

## வயோதிபரின்...

குறித்த முதியவர் அந்த பகுதியில் தனிமையில் வாழ்ந்து வந்ததாக கூறப்படுகின்றது. சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஞா)

## புதிய ஆணை...

களை நியமிப்பதற்கான பரிந்துரை நீதி அமைச்சினால் ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என நீதி அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.யூ.எம்.அலி சப்ரி தெரிவித்தார்.

இதேவேளை காணாமல்ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் இடைக்காலத் தீர்வாக இழப்பீடு வழங்கும் பணி ஆணையாளர்கள் நியமனத்தின்பின் முன்னெடுக் கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.(ஞா)

## மாகாணத் தேர்...

என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

மாகாண சபைத் தேர்தலை உடன் நடத்தக் கோரினாலும் தேர்தலை நடத்த அரசாங்கத்தால் முடியாது எனவும் சட்டத்தை மாற்றாது அது சாத்தியமில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

உயர் நீதிமன்றின் அறிவுறுத்தல்படி முறையாக சட்டத்தை தயாரித்து அந்த செயற்பாடுகளை முடித்த பின்னரே தேர்தலை நடத்த முடியும் என அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஞா)

## பாடசாலைகள்...

05, 11, 13ஆம் தரங்களுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகவிருக்கின்றன. கோவிட் தொற்றுக் காரணமாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனைக்கு அமைய இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஞா)

## நேற்றும்...

நாயகம் நேற்று உறுதிப்படுத்தினார்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 527ஆக அதிகரித்துள்ளது.(ஞா)

## ஜெனிவா பிரே...

தானியா தலைமையிலான இணை அனுசரணை நாடுகளால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணையில் உள்ள விடயங்களையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவை தவறான தகவல்கள் மற்றும் தரவுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளவை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேநேரம், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கே ஜனாதிபதி கோட்டாபய விரும்புகின்றார்.

அதற்காக அவர்களின் கோரிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்துவதோடு அவர்களுடன் விரைவில் சந்திப்புக்களை நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டு வருகின்றது என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன், குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானவர்களுக்கு பயணத்தடைகளை விதிக்குமாறு கோரப்படுகின்றபோதும் ஐ.நா.பாதுகாப்புச் சபையிலேயே அது சம்பந்தமான தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் எனினும் உண்மைக்குப் புறம்பான விடயங்கள் அங்கு கொண்டு செல்லப்பட்டால் சீனாவும் ரஷ்யாவும் எமக்கு ஆதரவளிக்கும் என்றார். (ஞா)

## புலிகளுக்கு...

முறையீட்டுத் தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2000ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட சுயாதீன அமைப்பான, தடைசெய்யப்பட்ட அமைப்புகள் மேன்முறையீட்டுத் தீர்ப்பாயம் பிரித்தானியாவின் உள்துறை அமைச்சர் ப்ரீதி பட்டேலிற்கு இந்த உத்தரவை விடுத்துள்ளதாகவும் இதனால் விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடை நீக்கப்படலாம் எனவும் டெய்லி மெயில் செய்தி வெளியிட்டுள்ளது. (ஞா)

## 19...

வடமாகாணத்தில் 19 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக யாழ்போதனா வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்துள் ளன.

நேற்றைய தினம் 422 பேருக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் யாழ்.மாவட்டத்தில் 13 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அதில் 7 பேர் யாழ்.சிறைச்சாலை கைதிகளாவர்.

மேலும் வவுனியா மாவட்டத்தில் ஒருவருக்கும் முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் நிலையத்தில் 5 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.(ஞா-18)

## அனைத்து மக்களுக்கும் சமவுரிமை – தினேஷ்

(கொழும்பு)

நாட்டின் அனைத்து மக்களுக்கும் சம உரிமை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வின்போதே அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு உட்பட ஒரு ஒற்றையாட்சி நாடாக நாட்டின் அனைத்து மக்களுக்கும் சம உரிமைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். (ஞா)

## காணி ஆவணங்...

செல்லப்பட்டமை எனது முடிவு அல்ல அதற்குரிய அதிகாரமும் இல்லை என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் இருந்து காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் காணிப்பத்திரங்கள் அநுராதபுரத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டமை அந்த ஆணைக்குழு மற்றும் அமைச்சின் முடிவே எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயல்கத்தில் இருந்து காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் வடமாகாண காணி கோப்புகள் தங்கள் அனுமதியுடன்தான் எடுத்துச் செல்லப்பட்டதா? என ஊடகவியலாளர் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ஞா-107)


தன நிதானய
திகதி - 14/03/2021 சீட்டிழுப்பு இலக்கம் - 463
X 26 28 55 59
3 1 5 2

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 14.03.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2721
வெற்றி இலக்கங்கள்
P 13 40 42 67

மஹஜன சம்பத
திகதி 2021/03/14
சீட்டிழுப்பு இலக்கம் 4426
Y 4 6 7 6 9 8

தரு திரி சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 30 திகதி 14/03/2021
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
M 30 53 56 83
தேசிய லொத்தர் சபை

செவன
திகதி 14/03/2021
சீட்டிழுப்பு இலக்கம் 322
K 18 23 52 59

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 1222
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி 14.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 117,522,320
வெற்றி இலக்கங்கள் 05 13 50 62 L
அபிவிருத்தி லொத்தர் சபை

சனிதா
சீட்டிழுப்பு இல: 3552
வர்ணம் : இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 14.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 31,461,360
வெற்றி இலக்கங்கள் 10 13 27 35 C
அபிவிருத்தி லொத்தர் சபை

ஜய
சுப்பர் ஜக்பொட் 30,86,436/=
திகதி : 14.03.2021
வெற்றி வாரம் : 3103
வர்ணம் : ஊதா
வெற்றி இலக்கங்கள் 21 31 49 56
மீனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,835,620

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1396 நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 14/03/2021 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் A 03 06 30 61
அடுத்த சுப்பர் ஜக்பொட் 74,189,080/=

சீட்டிழுப்பு வாரம் 702
வர்ணம் மஞ்சள்
திகதி 14.03.2021
N 01 46 58 79
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 77,492,510
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

## ஐ.நாவின் திருத்தப்பட்ட பிரேரணை

# வடக்கு மாகாண சபைக்கான அதிகாரப் பகிர்வும் உள்ளீர்ப்பு

(ஜெனீவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது கூட்டத்தொடரில் பிரித் தானியா தலைமையில் இணை அனுசரணை நாடுகளினால் இலங்கை தொடர்பில் கொண்டு வரப்படவுள்ள பிரேரணையானது திருத்தப்பட்டு முன்னரை விடவும் வலுப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முன்னதாக 15 அவதானிப்புக்கள் மற்றும் 16 பரிந்துரைகளுடன் பிரித்தானியா தலைமையில் இணை அனுசரணை நாடுகளால் சமர்ப்பிக்கப்பட்ட 'பூச்சிய' வரைவானது முறைசாரா கூட்டங்களில் மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டது.

இந்நிலையில் பிரித்தானியா உள்ளிட்ட அனுசரணை நாடுகளின் குழு மற்றும் பிரேரணையில் சில திருத்தங்களைச் செய்துள்ளது. குறிப்பாக, 7 ஆவது அவதானிப்பு பந்தியில் "இலங்கை அரசியலமைப்பின் 20 ஆம் திருத்தம் நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்கு வந்துள்ளதைக் கருத்திற்கொண்டு, ஜனநாயக ஆட்சி, முக்கிய அமைப்புக்களின் செயற்பாடுகள் மீது சுதந்திரமான மேற்பார்வை ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவது உள்ளடங்கலாக உள்ளாட்சி அமைப்புக்களை மதிக்குமாறு அரசை ஊக்குவித்து, இலங்கை அரசியலமைப்பின் 13 ஆம் திருத்தத்திற்கு அமைவாக அனைத்து மாகாணசபைகளும் செயற்திறனுடன் இயங்குவதை உறுதி செய்யுமாறு ஊக்குவித்து" என்று பூச்சிய வரைவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இப்பந்தியானது அதிகாரப் பகிர்வு தொடர்பான கடப்பாடுகளை நிறைவேற்றுமாறும், மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதன் மூலமும், அனைத்து மாகாணசபைகளும் 13 ஆவது திருத்தத்தின்படி திறம்பட செயற்பட முடியும் என்பதை உறுதி செய்வதன் மூலமும், "உள்ளாட்சி நிர்வாகத்தை மதிக்க வேண்டும்" என்றும் இலங்கை அரசிடம் கோரப்பட்டுள்ளது. அத்துடன் "வடக்கு மாகாண சபைக்கான அதிகாரப் பகிர்வு" என்றும் குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையின் நல்லிணக்கம், மோசமான மனித உரிமை மீறல்களுக்கான நீதியை அடைவது தொடர்பான முன்னேற்றங்கள் குறித்து, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம், வாய்மொழி அறிக்கையையும், அடுத்த ஆண்டு மார்ச் மாதம் எழுத்து மூலமான அறிக்கையையும் ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிக ரால் சமர்ப்பிக்க வேண்டும். அதாவது 6 மாதங்களுக்கு ஒரு முறை உயர்ஸ்தானிகர் ஆணையாளர் அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்று திருத்தப்பட்டுள்ளது.

அத்துடன்2020 ஆம்ஆண்டு செப்ரெம்பரில், புதிய தீர்மானம் கொண்டு வரப்படுவதற்கு முன்னர், ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளார். கடந்த காலங்களில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளின் ஆதரவை உறுதிப்படுத்துவதற்காக முன்மொழியப்பட்ட பூச்சிய வரைவு மென்மைப்படுத்தப்படுகின்றபோதும், இலங்கை தொடர்பான புதிய வரைவு வழக்கத்துக்கு மாறாக வலுப்படுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. (ஞா)


வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் 100% பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 6113

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 3536

அருள்
இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை.
இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி.
தொ.பே:- 076 443 1576 (C-1697)



NEW SCIENCE UNIVERSE
A/L PHYSICS 2023
20.03.2021
புதிய பிரிவுகள் ஆரம்பம்
◆ 2022 - Light
◆ 2021 - Fields
இந்த ஆண்டு பரீட்சார்த்திகளுக்கான கடந்தகால வினாத்தாள் - மீட்டல் வகுப்புகள் நடைபெறுகிறது.
Con - 076 322 0916 FB page - @NSUloga
No. 52, Stanly Road, Jaffna.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை.



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623 (4867)



A/L 2023 ENGLISH MEDIUM
ZOOM ONLINE CLASSES
Colombo best Teachers
Chemistry By - S.T. UMASHANKAR
ஆரம்பம் - 20.03.2021 Morning 11.00 a.m
Physics By - S.Ganeshan
ஆரம்பம் - 21.03.2021 Night 8.00 p.m
Physics Tamil Medium
ஆரம்பம் - 21.03.2021 Night 9.00 p.m
Combined Mathematics
By Rtn - A. Harishan
ஆரம்பம் - 20.03.2021 12.30 p.m
(C-1666)
தொடர்புகளுக்கு
Chemistry : 077 770 9249
Physics : 077 927 9575
Combined Mathematics : 077 369 0611
மாணவர்கள் இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணையமுடியும்.



2023 A/L
SMART SCIENCE CENTRE
(Neeraviyadi, Jaffna.)
◆ பௌதிகவியல் By - T.K.Kajan B.sc
◆ உயிரியல் By - S.Thavaraj B.sc (PGDE)
◆ இரசாயனவியல் Ehan B.sc (Spl. in chem.)
◆ இணைந்த கணிதம் By - T.S.Rankan B.sc
எமது கல்வி நிலையத்தில் வகுப்புக்கள் விரைவில் ஆரம்பமாக உள்ளது.
எமது நிலையத்தில் கல்வி கற்றுக்கொண்டிருந்த மாணவர்கள், புதிதாக வகுப்பில் இணைந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் 077 653 1177 எனும் இலக்கத்திற்கு தொடர்பினை மேற்கொண்டு தங்களது பதிவினை உறுதி செய்துகொள்ளவும்.
077 653 1177 (6137)



A/L - 2K23
(கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்)
மார்ச் (20.03.2021)
காலை - 9.00 a.m
DMI JAFFNA (C-1673)



அண்ணா EXPRESS Courier Services
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/= 070 3305500 077 888 9388 (C-1637)
976, கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)



விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
0768226240 DHL (C-1636)



வேலையாட்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் நீண்டகால பாரம்பரியமிக்க உயர்தர சைவ உணவகம் / குளிர்பான நிலையத்திற்கு
◆ சமையலாட்கள் (முன்னனுபவம் விரும்பத்தக்கது.)
◆ உணவு பரிமாறுபவர்கள்
◆ காசாளர் (பகுதி / முழுநேரம்)
◆ சிட்டை எழுதுனர்
கவர்ச்சியான கொடுப்பனவுகள் மற்றும் சலுகைகள் வழங்கப்படும்.
உடன் தொடர்பு ☎-074 159 6978 (6147)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.